


OFFICE OF THE REGISTRAR OF BOOKS
13 FEB 1952
MADRAS

# பொங்கல் வாழ்த்து

பல நிறங்களில் கவர்ச்சிகரமான
அழகிய பொங்கல் வாழ்த்துக்கள்
விற்பனைக்குத் தயாரிலிருக்கின்றன

ஒரு அணா, இரண்டு அணா, மூன்று அணா விலையில் மூன்று வகைகள் கிடைக்கும். 7 அணா தபால்தலை அனுப்பினால் மாதிரி வகைக்கொன்று
— அனுப்பப்படும். —

ஐந்து ரூபாய்க்கு மேற்பட்ட ஆர்டருக்கு மொத்த விலை:

| | | | |
|---|---|---|---|
| 1 அணா | விலையுள்ளது | 100 | 5—0—0 |
| 2 அணா | ,, | ,, | 10—0—0 |
| 3 அணா | ,, | ,, | 15—0—0 |

தபாற் செலவு இலவசம் — விற்பனை வரி தனி

●

விவரங்கட்கு:

**பொன்னி லிமிடெட், சென்னை-21**

# பொன்னி பொங்கல் மலர் 1952

அண்ணுவின் விளக்கக் கட்டுரை, புரட்சிக் கவிஞரின் நற் கவிதை—இவை மலரில் இடம் பெறும் எழுத்தோவியங் களின் மணிமுடிபோல் விளங்குகின்றன.

மூன்று சிறப்படங்களை மாதவன், ரெஸாக், கண்ணன், பாண்டியன், ஜெகன்னுத் முதலிய பெயர்பெற்ற ஓவியர்கள் வரைந்திருக்கிறார்கள். தமிழரின் பண்டைநாள் பெரு வாழ்வை இக்கலையரங்கில் நாம் கண்டு மகிழலாம்.

'நடுத்தெருப் பிரமுகர்களை' அறிமுகப்படுத்தும் புகைப் படப் பகுதியும், சிந்திக்கச் செய்யும் சிறு சிறு நிழற் படங் களும் குறிப்பிடத் தக்கவை.

நகைச்சுவைப் பகுதி மலரில் திறம்பட விளங்குகிறது. 'ரெஸாக்'கின் கேலிச் சித்திரங்கள் மலர் முற்றும் தூவப்பட் டிருக்கின்றன. 'அந்தக் காலம்' 'இந்தக் காலம்' காண வேண்டிய பகுதி.

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் பேட்டிக் கட்டுரை மலரின் புதுமையான பகுதியாகத் திகழும்.

தங்கமணியின் கதையும் பாட்டும் தம்பி தங்கைகள் ஆவலோடு பார்க்கும் 'சிறுவர் அரங்கத்'தில் கண்ணையும் கருத்தையும் கவரும் வண்ணம் மிளிர்கின்றன.

பக்கத்திற்குப் பக்கம் பலவண்ணப் படங்களோடு, முற்றும் ஆர்ட் தாளில் அரிய கலைப் படைப்பாக உருவாகும் 'பொன்னி'யின் ஐந்தாவது பொங்கல் மலர், தைப்பொங்கல் நாளில் உங்களை மகிழ்விக்க வெளிவருகிறது.

# 1952 பொன்னி பொங்கல் மலரில்

கவியரசர் பாரதிதாசன்
அறிஞர் அண்ணாத்துரை
வாணிதாசன்
முடியரசன்
கோவை இளஞ்சேரன்
நாரா. நாச்சியப்பன்
உடுமலை நாராயணக் கவி
இராம. வே. சேதுராமன்
எஸ். முத்தையா
அறிஞர் கா. அப்பாத்துரை
டாக்டர் மு. வரதராசன்
சோம. லெ. இலக்குமணன்
பெ. நா. அப்புசாமி
மு. அண்ணாமலை
இரா. நெடுஞ்செழியன்
கோவைக்கிழார்
என். கே. வேலன்
இசையரசு தேசிகர்
நா. கி. நாகராசன்
விசு. திருநாவுக்கரசு
பெரி. அருணாசலம்
டர்பன்ச. மு. பிள்ளை
முருகு சுப்பிரமணியன்
விந்தன்
பெ. தூரன்
அரு. ராமநாதன்
சோமு
அகிலன்
ரகுநாதன்
மாயாவி
கு. அழகிரிசாமி
டி. கே. சீனிவாசன்
க. சண்முகசுந்தரம்
வ. சம்பந்தன்
இளமைப்பித்தன்
'சுகி'
தங்கமணி
சுலோசனா
எஸ். ஆறுமுகம்

★ ஆகியோர் எழுதுகிறார்கள். ★

# பொன்னி

பொருளடக்கம்

மலர் 5 | டிசம்பர் 25, 1951 | இதழ் 20

திருவள்ளுவர் ஆண்டு 1982 மார்கழித் திங்கள் 10-ம் நாள்



| | | | |
|---|---|---|---|
| பிரிவினைப் போராட்டம் | .... | அறிஞர் அண்ணுதுரை | 3 |
| இலட்சிய விளக்கு | ... | கார்ட்டூன் | 4 |
| மக்கள் ஆட்சி மலர வேண்டும் | ... | தலையங்கம் | 5 |
| மகத்தான வெற்றி | .... | | 7 |
| ஆடும் மாடும் | .... | டி. கே. சீனிவாசன் | 10 |
| இரண்டு ஆண்கள் | ... | கு. அழகிரிசாமி | 17 |
| முடியாத கதை | .... | பெரி. சிவனடியான் | 27 |
| பாதுஷாவின் காதல் | .... | இளமைப்பித்தன் | 29 |
| ஆ, இது என்ன ? | .... | நாஞ | 33 |
| இரு மனம் | ... | எஸ். ஆறுமுகம் | 37 |
| நமக்குள்ளே | .... | சுகி | 43 |
| ரங்கோன் ராஜா | ... | தங்கமணி | 51 |
| வஞ்சம் தீர்ந்தது | .... | மு. அண்ணுமலை | 56 |


திராவிடநாட்டுப் பிரிவினையை, மக்கள் முன்வைத்து 1954ல் பொது மக்கள் வாக்கெடுப்பு (Referendum) நடத்துவோம். அதன் பிறகு, மக்கள் தீர்ப்பை, மத்திய சர்க்காரிடம் காட்டிக் கேட்போம். அவர்கள் பிடிவாதம் செய்தால், ஐ. நா. சபைக்குப் போவோம். மத்தியசர்க்கார் மறுப்பார்கள். எதிர்த்தால் சிறையில் தள்ளக் கூடும். அப்பொழுது நடைபெறும் தேர்தலில் நாம் கலந்து கொள்வோம். சட்டசபையில் அதனையே தீர்மானமாக்கிடுவோம். சட்டசபைகளிலும் அப்பொழுது போராடுவோம். வடநாட்டு சர்க்கார் நமது மந்திரி சபையைக் கலைப்பார்கள். அதே பிரச்சினையை வைத்து மீண்டும் தேர்தலில் போட்டியிடுவோம். மீண்டும் மீண்டும் நாம் ஜெயிப்போம். இத்தகைய முறையில் போராட்டம் நடைபெறும்.

[தி. மு. க. மாநில மாநாட்டுத் தலைமையுரையில் அறிஞர் அண்ணுதுரை இவ்வாறு குறிப்பிட்டார்]


தேர்தல் அமளி
திராவிட நாட்டுப்
பிரிவினை
தி.மு.க

# மக்கள் ஆட்சி மலர வேண்டும்

தேர்தல்நாள் நெருங்கி விட்டது. ஜனவரி பிறந்தால் தமிழ் நாட்டில் தேர்தல் தொடங்கிவிடும். இந்தியாவின் மற்ற சில பகுதிகளில் தேர்தல் இப்பொழுது நடந்து கொண்டிருக்கிறது. இமாசலப் பிரதேசம் தேர்தலை முடித்து விட்டது—அங்கே காங்கிரஸ் பெரும்பான்மையான ஸ்தானங்களைக் கைப்பற்றியிருக்கிறது. திருவாங்கூர் — கொச்சி தேர்தல் முடிவுகள் வந்துகொண்டிருக்கின்றன. காங்கிரஸ் தோற்றுவிடுமோ என்ற நிலை அங்கு ஏற்பட்டிருக்கிறது. ஹைதராபாத், ஒரிஸ்ஸா, மத்திய பிரதேசம் முதலான பகுதிகளில் தேர்தல் ஆரம்பமாகியிருக்கிறது. மக்களின் கவனமெல்லாம் இவ்வாறு தேர்தல் பக்கம் திருப்பப்பட்டிருக்கிறது.

தமிழ்மக்கள் தேர்தலில் ஆற்றவேண்டிய கடமைகளைப்பற்றி ஏற்கனவே நாம் குறிப்பிட்டிருக்கிறோம். மீண்டும் அவற்றை வலியுறுத்திக் கூற விரும்புகிறோம்.

1. தேர்தலில் வாக்காளர்கள் ஒருவர் கூடத் தவறாமல், ஆண்கள் பெண்கள் அனைவரும் ஓட்டுச் செய்ய வேண்டும்.

இது முக்கியமான கடமை. ஓட்டுரிமை இருந்தும் அலட்சியமாக இருப்போர் நாட்டு நலனுக்குக் கேடு செய்கிறார்கள் என்றுதான் பொருள். தங்கள் வாக்குகளைப் பதிவு செய்வதோடு, தங்கள் அருகில் இருக்கும் அனைவரையும் வாக்களிக்கச் செய்வதும் நண்பர்களுடைய கடமையாகும் என்று வற்புறுத்த விரும்புகிறோம். அத்துடன் ஓட்டளிக்கும் முறை பற்றித் தெரியாதவர்களுக்கு விளக்கம் தருவது படித்தவர்கள் கடமை; பொதுப் பணியில் ஈடுபட்டிருக்கும் இளைஞர்களின் கடமை; அறியாமையால் ஒரு ஓட்டு வீணானது என்ற நிலை ஏற்படாதவாறு அந்தந்த வட்டாரத்து மக்கள் கவனித்துக் கொள்ளவேண்டியது அவசியமெனக் கருதுகிறோம்.

2. தி. மு. கழகம் ஆதரவு தந்துள்ள அபேட்சகர்களுக்கு வாக்களிப்பது திராவிட நாட்டுப் பிரிவினையில் நமக்குள்ள நம்பிக்கையைக் காட்டுவதாகும்.

'திராவிட நாட்டுப் பிரிவினைக்காகச் சட்டசபையில், பார்லிமெண்டில் வாதாடுவேன்' என்ற உறுதிமொழிப் பத்திரம் அளித்துள்ளவர்களில் தக்கவர்களைத் தேர்ந்தெடுத்து ஆதரவுக்குரியவர்களெனச் சிலரை தி. மு. கழகம் அறிவித்திருக்கிறது. அவர்களுக்கு வாக்களிக்க வேண்டியது தமிழ்மக்கள் கடமை என்பதைக் கூற வேண்டியதில்லை.

3. மற்ற தொகுதிகளில் கம்யூனிஸ்டுக் கட்சியினரையும் மற்ற முற்போக்குக் கருத்தினரையும் ஆதரிப்பது வாக்காளர்களின் கடமையாகும்.

தமிழ்நாட்டில் தி. மு. க. ஆதரவு பெற்ற அபேட்சகர்கள் 74 பேர் நிற்கும் தொகுதிகள் தவிர மற்றும் நூற்றுக்கு மேற்பட்ட தொகுதிகள் இருக்கின்றன. அத் தொகுதிகளில் தமிழ்மக்கள் கம்யூனிஸ்ட்களுக்கும் அவர்கள் போட்டியிடாத இடங்களில் முற்போக்குக்கருத்துள்ளவர்களுக்கும் வாக்குகளை வழங்க வேண்டியது அவசியமாகும் என்பதை யாரும் உணரலாம்.

4. காங்கிரஸ் தோல்வியடைவது மக்கள் நல்வாழ்வுக்கு அவசியமாதலால் அந்தத் தோல்வி ஏற்படத்தக்க விதத்தில், காங்கிரஸை எதிர்த்து நிற்போரில் ஒருவரை மட்டுமே பெருவாரியாக ஆதரிப்பதும் மக்கள் கடமையாகும்.

காங்கிரஸை எதிர்த்து நிற்போர் தொகை பெருகப் பெருகக் காங்கிரஸ் வெற்றியடைவது உறுதியாகிறது. நடந்து முடிந்துள்ள தேர்தல்கள் இந்த உண்மையை நன்கு விளக்குகின்றன. எனவே தமிழ்மக்கள் காங்கிரஸ் எதிர்ப்பில் சிதறுண்டு போகாமல், ஒன்றுபட்டு வாக்குகளை வழங்கவேண்டுமென்பதும் நம் ஆவலாகும்.

அடுத்த ஐந்தாண்டு ஆட்சியின் திறம் இத்தேர்தலின் விளைவாகவே உருவாகுமாதலால் தமிழ்மக்கள் தங்கள் எதிர்கால நல்வாழ்வில் கருத்துக்கொண்டு விழிப்புணர்வுடன் மேற்கூறிய கடமைகளைச் சரிவர நிறைவேற்றி வைப்பார்களென நம்புகிறோம்— உண்மையான மக்கள் ஆட்சி மலர வேண்டுமென வாழ்த்துகிறோம்.

## சில குறிப்புகள்

'பொன்னி' பொங்கல் மலர் (14—1—1952) பொங்கல் திருநாளன்று வெளிவருகிற காரணத்தால் 10-1-52 இதழ் வெளிவராது; 25—1—52 இதழ் வழககம் போல் வெளிவரும்.

பொங்கல் மலர் பெற விரும்புகின்ற சந்தாதார் ரூபாய் 4 அனுப்பினால் மட்டுமே அவர்கட்கு மலர் பதிவுத் தபாலில் அனுப்பப்பெறும். புதிதாகச் சேரும் சந்தாதாருக்கும் இந்தச் சலுகை உண்டு.

இலங்கையில் வாழும் நண்பர்கள் வி. பி. பி. மூலம் மலர் பெற்றுக்கொள்ளலாம். மலேயா, பர்மா முதலிய வெளிநாடுகளிலுள்ள நண்பர்கள் ரூபாய் 4—8—0 அனுப்பினால் மலர் பதிவுத் தபாலில் அனுப்பப்பெறும்.

பொறுப்பாளர்.

தமிழ்நாடு ஆவணக் காப்பக இயக்கம்
197805

# மகத்தான வெற்றி!

திராவிட முன்னேற்றக்கழக மாநில மாநாடு கடந்த வாரத்தில் சென்னையில் சிறப்பாக நடந்து முடிந்தது. நான்குநாள் நிகழ்ச்சிகளும், நாடகங்களும், ஓவியக் கண்காட்சியும், ஊர்வலமும் யாரும் வியந்து பாராட்டத்தக்க முறையில் அமைந்திருந்தன. தமிழகத்தில் எந்த அரசியல் கட்சியும் பெற்றிராதசெல்வாக்கு தி. மு. கழகத்திற்கு வாய்த்திருக்கிறது என்பதை மாநில மாநாட்டிற்குக கடலெனத் திரண்டிருந்த மக்கட் கூட்டம் நன்கு எடுத்தியம்பியது. மாநில மாநாட்டில் நிகழ்த்தப் பெற்ற உரைகளும் நிறைவேறிய தீர்மானங்களும் மக்கள் மன்றமாக தி. மு. கழகம் விளங்கி வரும் நல்நிலையை நிலைநாட்டின. ஊர்வலத்தில் ஒரு லட்சம்; பந்தலில் உரைகேட்டோர் இரண்டு லட்சம், நாடகத்தின் போதோ அந்த எல்லையை மீறி வழிந்த மக்கள் வெள்ளம்—இவை காண்போர் கேட்போர் உள்ளத்தைப் பிணிக்கும் திறத்தனவே.

ஏன் இத்தனை கூட்டம்? ஏன் இலங்கையினின்றும், பம்பாயினின்றும், ஆமதாபாத்தினின்றும், தமிழகத்தின் மூலை முடுக்குகளிலிருந்தெல்லாம் மக்கள் சென்னைநகர் நோக்கி இம்மாநில மாநாட்டுக்காக ஓடோடி வர வேண்டும்? வசதிக் குறைவும், பொருள்நெருக்கடியும் இருந்தும், ஏன் இந்தஆர்வம், துடிப்பு மக்களிடையே காணப்படுகிறது? தேர்தலைக் காட்டுவார் சிலர்; காங்கிரஸ் ஆட்சி தந்த வேதனையைக் காட்டுவார் சிலர்; நாட்டுப் பிரிவினையின்பாலுள்ள ஆர்வம் என்பார் சிலர். இவர்கள் கூற்றுக்களில் உண்மையிருந்தாலும், மக்கள் தங்கள் அடிப்படைத் தேவைகளை உணர்ந்து, அவை சரிவரக் கிடைக்க வகைசெய்யும் நல்லாட்சி ஏற்படாதா, நம் வாழ்வு சீர்ப்படாதா என்று எண்ணுகிற, எண்ணி ஏங்குகிற நிலைதான் இந்த ஆர்வத்திற்கும் பெருங் கூட்டத்திற்கும் காரணமாகும். உணவுத்தொல்லை தீராத தொல்லையாகி நிற்கிறது. அரை வயிறும் குறைவயிறும் சாப்பிட்டுக் காலந்தள்ளவேண்டிய நிலையிலுள்ளோர் பலர். உடைக் கஷ்டமும், இடநெருக்கடியும் இவ்வாறே. வேலையில்லாத் திண்டாட்டம் வேறு. வேலை செய்தும் போதுமான ஊதியம் பெறுதார் படும் துயரங்களுக்கும் கணக்கில்லை. பொருளாதார நெருக்கடிகள் இவை. சமுதாய ஏற்றத் தாழ்வுகளும், சமூகச் சட்டங்களின் குருட்டுப் போக்கும், மூட நம்பிக்கைகளின் ஆதிக்கமும், மதவெறி தரும் மடமையும் பல சிக்கல்களை வளர்த்துக்கொண்டுதானிருக்கின்றன. அரசியல் விடுதலை வெள்ளையரிடமிருந்து கிடைத்

தும், நம் வாழ்வு உருப்பட வில்லையே என்று எண்ணுபவர் எந்தக் கொள்கையர் இந் நிலைக்குக் காரணமோ என்று உருகும் நிலையும் நேர்ந்திருக்கிறது. தாய் மொழிக்குத் தக்க நிலை தராத 'பேடி' மனப்பான்மையும் நாட்டை ஆட்டிப் படைக்கிறது. இந்த அவல நிலைமாறி, 'எல்லார்க்கும் எல்லாமும் இருப்பதான இடம் நோக்கி இந்த வையம் நடக்க' வேண்டுமென்னும் விருப்பம் எங்கும் முகிழ்த்திருக்கிறது. ரஷ்யா போய்வந்த கலைவாணர் 'அங்கே பசியில்லை பட்டினியில்லை, துயரில்லை' என்னும்போது, 'ஏன் அந்த நிலை இங்கே வரக்கூடாது?' என்று மக்கள் சிந்திப்பது இயற்கையே. விடுதலை பெற்ற புதிய சீனு இரண்டு ஆண்டுக் காலத்திற்குள் அடைந்திருக்கிற முன்னேற்றம் நம்மை ஆச்சரியமடைய வைப்பதோடு, 'நமக்கு வேண்டாமா அந்த முன்னேற்றம்?' என்ற கேள்விக் குறியையும் நம்மிடம் வைக்கிறது. இந்தச் சிந்தனைகள் சிக்கல்களைத் தீர்க்க உதவுகின்றன; உருப்படியான வழியை நாடுகின்றன.

தி. மு. கழகத்திற்குக் கிடைத்திருக்கும் மக்கள் ஆதரவு இந்த மாறுதலின் ஒருபகுதியேயாகும். தி. மு. கழகம் தாங்கள் விரும்புகிற நல்வாழ்வை அமைத்துத் தரும் சக்திவாய்ந்ததென்று மக்கள் கருதுகிற காரணத்தால் தான் ஏங்கிய முகத்திலும் சிறிது நம்பிக்கை ஒளி மிளிர தி. மு. கழகத்தின் அணிவகுப்பிலே அவர்கள் பங்குகொள்ள முடிகிறது. இந் நம்பிக்கைக்குப் பாத்திரமாக நடக்கின்ற பெரும் பேறு கழகத்திற்குக் கிடைத்திருக்கிறது; அதனை இயக்கும் அறிஞர் அண்ணாத்துரைக்குக் கிடைத்திருக்கிறது.

திராவிட நாட்டுப் பிரிவினைக்கு முதற்படியாக மொழிவாரி மாகாணப் பிரிவினை ஏற்பட வேண்டுமென்பதும், பின்னர் அம்மாகாணங்கள் தாமாக ஒன்று சேர்ந்து திராவிடக் குடியரசு நிறுவவேண்டுமென்றும் தீர்மானம் விளக்கமாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது. சென்னை, சித்தூர் மாவட்டம் முதலியவை தமிழருக்கே உரியவை என்று வற்புறுத்தியிருப்பதும், நாஞ்சில்நாடு தமிழகத்துடன் இணைவதை வரவேற்றிருப்பதும், புதுச்சேரி, காரைக்கால் முதலிய பகுதிகளினின்றும் அயல்நாட்டார் வெளியேற வேண்டுமென்பதும் குறிப்பிடத்தக்க தீர்மானங்கள். எண்ணெய்ப் பிரச்னையில் ஈரானுக்கு ஆதரவு தந்தும், பிரிட்டிஷாரை வெளியேற்றும் எகிப்தியருக்கு ஆசிகூறியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருப்பது முற்போக்குச் சக்திகளின் முன்னேடியாகத் தி. மு. கழகம் விளங்குகிறது என்பதையே எடுத்துக்காட்டுகிறது.

ஓவியக் கண்காட்சி மிகச் சிறந்த ஏற்பாடாக விளங்கியது. பயனுள்ள பணி என அனைவரும் பாராட்டத்தக்க வகையில் அமைந்து பார்த்தவர்கள் சிந்

தனைக்கெல்லாம் தெவிட்டாத விருந்தாய்த் திகழ்ந்தது. இத்தகைய உருவான பணிகள் வளர வேண்டுமென்பது நம் ஆசை.

நாடகங்கள் மாநாட்டின் சிறப்பான நிகழ்ச்சிகளெனத் தொகுக்கப்பட்டன. ஒவ்வொரு நாளும் மக்கள் மிகுந்த ஆர்வத்தோடு நாடகங்களைப் பார்த்து மகிழ்ந்தார்கள். தாய்மார்கள் நடத்திய 'போராட்டம்' இவ்வகையில் உருவான சிறந்த பயனாகும். லட்சத்திற்கு மேற்பட்ட மக்களைக் கவரும் வண்ணம் திறம்பட நடித்து 'சபாஷ்' பெற்றுவிட்ட தாய்மார்கள் தமிழ் வரலாற்றிலேயே புது அத்தியாயத்தைத் தொடங்கி வைத்திருக்கிறார்கள் என்று கூறுவது மிகையல்ல. இந்த முயற்சி வளரவேண்டும், நாடு இம் முயற்சியை வளர்க்கவேண்டும் என விரும்புகிறோம்.

இவை தவிர்த்து மாநாட்டு முக்கியநிகழ்ச்சி அண்ணா நிகழ்த்திய முன்னுரையும் முடிவுரையும்தான். நல்ல கொள்கை விளக்கமாக அமைந்து, ஆர்வத்தை வளர்க்கும் முறையில் உணர்ச்சி மழையாக அது விளங்கியது.

இவ்வாறு 'மகத்தான வெற்றி' என்று யாரும் பூரிப்படையத் தக்க வகையில் நடந்து முடிந்திருக்கிறது மாநாடு. உணர்ச்சி பொங்க, ஆர்வம் பொங்க ஊர் திரும்பினர் அனைவரும். ஆங்காங்கு அவர்களைக் கண்டோர் இச் செய்திகளைக் கேட்டு உணர்ச்சி பெற்றிருப்பர்; ஆர்வப் பெருக்கினால் அகமகிழ்ந்திருப்பர்.



"தேர்தல் முடியட்டும், பிறகு ஒரேயடியா வெள்ளையடிச்சுக் கிடலாம்"

ஆனால் மாநில மாநாட்டோடு வேலை முடிந்துவிடவில்லையென்பதையும், திரண்டிருக்கும் மக்கள் ஆர்வத்தைச் சரிவரப் பயன்படுத்திக்கொள்வதில்தான் முழு வெற்றி அடங்கியிருக்கிறதென்பதையும் பொறுப்புள்ள யாரும் மறந்துவிட முடியாது. "வளர்ந்திருக்கும் ஆர்வத்தை வகைப்படுத்தவேண்டும். இல்லாவிட்டால், நம்மையே அது கொன்றுவிடும். ஆர்வத்தை அளவில்லாமல் வளர்த்திருக்கிறோம். அதற்கேற்ற பணியாற்றும் வழி அமைக்கவேண்டும்." என்று அண்ணா தம் தலைமையுரையில் குறிப்பிட்டிருப்பதைச் சுட்டிக்காட்டுவதோடு இக்கட்டுரையை முடிக்க விரும்புகிறோம்.



# ஆடும் மாடும்

டி.கே. சீனிவாசன்

## பத்தாவது அத்தியாயம்

பிரிக்கப்படும் மிட்டாய்ப் பொட்டலத்தை ஆசையோடு பார்க்கும் சிறு குழந்தையைப் போல வாடி வதங்கிய தோற்றத்தோடு வாயிலில் நிற்கும் சேகரனையே பார்த்தாள் மோகனா. இரவெல்லாம் கவிந்திருந்த பனி காணாமல்போயிருந்தது. செந்நிற வட்டமாக வான விளிம்பில் தலை நீட்டிய கதிரவன் கொஞ்சம் கொஞ்சமாகப் பழுத்து வெண்ணிற ஒளிப்பிழம்பாக உருப் பெற்றிருந்தான். உச்சி வானத்தை நோக்கி மெல்ல உயரும் கதிரவன், மோகனாவின் உள்ளத்திலும் தன் சாயலைக் காட்டினான். இளஞ்சூட்டிலிருந்து வெம்மைக்குப் பரிணமித்தது அந்தப் பேதையின் உள்ளம்.

நழுவ விட்டாலும் விலக மறுத்த அந்த நல்வாழ்வு...! ஒரே வினாடிதான்! முதல்நாளைய நிகழ்ச்சிகள் அத்தனையும் ஒன்று கலந்து அவளிடம் ஒரு முடிவை உண்டாக்கிவிட்டன. "வஞ்சித்தாலல்லது உன்னால் ஒழுங்காக வாழவே முடியாது!" என்று யாரோ அறிவுறுத்துவதுபோலத் தோன்றிற்று. சோமுவா, சுந்தரியா அந்தக் குரலை எழுப்பியது என்பது புரியவில்லை, அவளுக்கு ஓட்டை விழுந்த இசைத் தட்டைப்போல அதே சொற்கள் திரும்பத் திரும்ப, அவளுடைய உள்ளத்தின் அடித்தளத்திலிருந்து ஒலித்துக்கொண்டே இருந்தன. பேரிரைச்சலோடு கீழே விழும் நீர்வீழ்ச்சியால் அடித்துக்கொண்டு போகப்படுவதை உணர்ந்தாள். நினைவிழந்தாள்-நிலை குலைந்தாள்-நீர் இழுத்துச் செல்லும் போக்கிலேயே தன்னையும் போகவிட்டாள்.

"வேண்டாம் இந்த விபரீத ஆசை!" என்று அணைகோலியது அறிவு.

"தொல்லை—ஒரு தொடர் கதை! இந்தத் தலைப்பிலேயா என் எதிர்காலம் எழுதப்பட வேண்டும்? இனியும் என்னாலே தாங்கமுடியாது" என்று ஆசை அறிவுக்குப் பதில் கொடுத்தது.

"அபலைப் பெண்ணொருத்தியின் கண்ணீரிலா உன்னுடைய ஆனந்தம் அமையவேண்டும்?" எதிர்த்துக் கேட்டது அறிவு.

"என் கண்ணீருக்கு இரக்கங் காட்ட எவருமே இல்லையே! கொடியிலே குலுங்கும் பூங்கொத்து அவள்—எதிர்காலம் அவளுக்கு இருக்கிறது! நான் கிள்ளி எறியப்பட்ட மலர்—மண்ணோடு மண்ணாக மக்கிப் போனால்...?"—ஆசை அறிவை அடக்கிற்று.

ஆசை அளவற்றசக்திபெற்று அவளுடைய அறிவை அடிமைப்படுத்திவிட்டது. இளமை உணர்ச்சிகள் எல்லாம் உயிர் பெற்று அவளைத் தம் வயப்படுத்தின. இன்னதென்று விளங்காத துடிப்பு அந்தத் தோகையிடம் மலிந்திருந்த உயர்ந்த பண்புகளை எல்லாம் உருக்குலைக்கத்தொடங்கிற்று. தவறை உணர்ந்தாள்—தவறாமல் இருக்க முடியவில்லையே என்பதை நினைத்து ஏங்கினாள்.

"என்னை மோசம் செய்து விடாதே, அக்கா!"—அன்று சக்கு சொன்ன சொற்கள் அவள் கவனத்துக்கு வந்தன.

"முயன்றேன், சக்கு. முடியவில்லை" என்று முணுமுணுத்தது மோகனாவின் வாய்.



"ஏனுங்க இந்தக் கூட்டத்திலே தானா 12 அவுன்ஸ் அரிசி குடுக்குறுங்க ?"

காலியான இடத்தில் சோமு காட்சியளித்தான். உரக்கச் சிரித்தான்—உருவத்தைப் பல கோணங்களில் காட்டிப் பயமுறுத்தினான்.

"மோகனா! நீ நட்சத்திரமாக வேண்டியவள். விண்ணுக்கு உயர்த்தப் போகிறேன். மண்ணிலேயே இருந்து மக்கிப் போகாதே"—என்று குரல் கொடுத்தான். எங்கோ இருந்து.

"சோமு! நட்சத்திரம் ஆக்கப் போகிறீர்களா? அது எவ்வளவு மட்டமான எண்ணம்? தாரகை ஒரு சிறு ஒளித்துணுக்குதானே! நான் நிலவாகப் போகிறேன். எனக்கு ஒளிகொடுக்கக் கதிரவனே என்னைத் தேடிவந்திருக்கிறான்"—என்று உரத்துக் கூறினாள்.

சுந்தரிக்கு ஏதும் புரியவில்லை—மோகனாவையே பார்த்துக் கொண்டு நின்றாள்.

"அக்கா!" என அன்போடு அழைத்தாள்.

மோகனுவுக்கு அது கேட்க வில்லை. அவளுடைய உடல், உள்ளம், உயிர் மூன்றும் உணர்ச்சியால் கரைக்கப்பட்டு விட்டன. எவருமே இல்லாத எல்லையற்ற பரந்த வெளியில் தனி மலராக மலர்ந்துவிட்டாள். சோமு இல்லை—சக்கு காணப் படவில்லை—சுந்தரிக்கு அங்கு வேலையே இல்லை! சேகரன் மட்டுந்தான் இருந்தான்! உடலை உருக்குலைக்காமல் அவள் உருவைமட்டும் ஓவியங்களாக்கி ஒரு மலர்க்காட்டையே சமைத் தான். தேன் குடிக்கும் வண்டாகி அவளைத் தேய்பிறையாக்க வில்லை. அவன்—அழகைமட்டும் அச்சுப் பிரதியெடுத்துக் கொண்டு வளர் பிறையாகவே விட்டுவைத்தான். வாடாத உடல்—வதைபடாத உள்ளம்—வர்ணக் கலப்பால் உருவான சாகாத சித்திரங்கள்! இன்ப எல்லையின் வரம்பிலே இருந்து அவளுடைய இதயம் உதிர்த்த நினைவிதழ்கள் நிறம் பெற்றன—மணம் வீசின—மகிழ்ச்சியும் ஊட்டின.

பதுமையாகி நின்ற தன் அக்காளைப் பார்க்கப் பார்க்கச் சுந்தரிக்கு விநோதமாக இருந்தது. வீதியில் நின்ற மனிதனைப் பார்வையால் பற்றியிழுக்கும் மோகனுவின் முகத்தில் தோன்றி மறையும் எண்ணற்ற இன்ப அலைகளைக் கண்டாள்—கருத்திலும் பதித்துக்கொண்டாள். சினிமா உலகில் எத்தனையோ காதல் சித்திரங்களில் அவள் நடித்திருக்கிறுள். செயற்கைச் சூழ்நிலையில், எழுதிக் கொடுக்கப் பட்ட காட்சிகளைக் கவனத்தில் வைத்து எத்தனையோ தடவைகளில் எவ்வளவோ பேருக்குக் காதலியாகி இருக்கிறுள். வீண் சொற்களால் உருவாக்க முடியாத உணர்ச்சியை விழிகளால் உண்டாக்க முடியும் என்பதை இதுவரையில் அவள் உணர்ந்ததே இல்லை. "காதல் ஒரு பௌதீக மாறுதல்—வெளிப்படையாக உருவாக்கிக் காட்டும் உள்ளக்கிளர்ச்சி"—என்றுதான் சினிமா உலகம் அவளுக்கு உணர்த்தி இருந்தது. ஆனுல் இன்று...? அது ஒரு ரசாயன மாறுதல், உள்ளத்துள்ளேயே உண்டாகும் மலர்ச்சி என்ற உண்மையை உணரமுடிந்தது. தன்னை மறந்திருக்கும் அக்காளுக்கு எப்படி உணர்வுண்டாக்குவது என்பதைச் சிந்தித்தாள்.

"ஏன் அக்கா, அவரை அப்படிப் பார்க்கிறுய்? உனக்குத் தெரியாத......"

"இல்லை, இல்லை. மிகவும் வேண்டியவர்!"

"அப்படியானுல்......அத்தானு?" என்றுள் குறும்பாக அந்த நடிகை.

"ஆகப்போகிறவர்!" என்ற பதில் மோகனுவிடம் உருவானது—ஒலியாகவில்லை!

"தெரிந்திருந்தால் அப்போதே அழைத்து வந்திருப்பேனே" என்று சொல்லிக் கொண்டே ஓடினுள் சுந்தரி.

மோகனுவின் இருதயம் மத்தளம் கொட்டியது. நரம்புகள்

நடனமாடத் தொடங்கின. மூலையிலிருந்து மோகன கீதம் கிளம்பி ஒருவிதக் கிளர்ச்சியை உண்டாக்கிற்று அவளிடம். அந்த இன்னிசையில் தன்னை இழந்தாள்—இந்த உலகை மறந்தாள்—எழில் வாழ்வொன்றையே நினைத்தாள்!

"மோகனா!"

தாளம் தவறாது ஒலித்த அந்த மூன்று எழுத்துக்களிலும் ஒருவிதப் போதை கலந்திருந்தது. மயங்கித் திரும்பினாள்... சேகரன் நின்று கொண்டிருந்தான்!

"சேகர்!"

முகங்கள் இரண்டும் மலர்ந்தன — விழிகள் நான்கும் நீர்த்துளிகளைக் கக்கின. கண்களின் கருவிழிகளுக்குள்ளே தங்களுடைய சிறு உருவங்கள் பதிந்திருக்கப் பார்த்தனர் அவர்கள் இருவரும். அளவுக்கு மீறிய ஒளி அந்த அறையில் நிறைந்திருப்பது போலத்தோன்றிற்று. குளிர்ந்த உள்ளங்கள்—வெம்மையால் கொப்பளிக்கும் உடல்கள்! கட்டிப் பிடித்துக் கொண்ட கடிகார முட்கள், இதைக் கண்டு வெட்கி விட்டுப்பிரிந்து பத்து ஒலிகளை உதிர்த்து விட்டன.

"சாதலும் வாழ்தலும் அற்ற
இடம்—அணுச்
சஞ்சலமேனும் இல்லாத இடம்.
மோதலும் மேவலும் அற்ற
இடம்—உளம்
மொய்த்தலும் நீங்கலும் அற்ற
இடம்"



"இந்த ஓட்டல் முதலாளி தேர்தலுக்கு நிற்கிறார். அதனாலேதான் ஓட்டல்லே இந்த ஒரு மாதமாக் கூட்டம் பிரமாதம்!"

---

என்ற புரட்சிக்கவிஞர் பாரதிதாசனுடைய கவிதை அடிகள் காற்றிலே மிதந்து வந்து இருவருடைய இதயங்களையும் தழுவின. சுந்தரி பாடிக் கொண்டிருந்தாள், பக்கத்தறையிலிருந்து.

"சேகர்! இப்படியே நாம் எப்போதும் இருப்போமா?" என்றாள் மோகனா, ஏக்கத்தோடு.

"இருப்போம் மோகனா! எங்கேயாவது, எவர் பார்வையிலும் படாத இடத்துக்குப் போய்விடுவோம். சோமுவின் சாயலே தென்படாத இடத்தில் சுக வாழ்வு நடத்தலாம். உன்னை வைத்து எழிலோவியங்கள் பல தீட்டிக் காட்டுகிறேன்......"

"நான் அவைகளை எடுத்துப் போய் விற்று வருகிறேன்" என்றாள் மோகனா.

"நானே அவைகளை வாங்கிக் கொள்ளுகிறேன்" என்ற குரல் கேட்டது.

இருவரும் திரும்பிப் பார்த்தனர். சோமு நின்றுகொண்டிருந்தான்! ஊர்வலமாகப் போய்க் கொண்டிருந்த குதிரைகள் திடீரென ஓட்டப்பந்தயம் தொடங்குவதைப் போல அடித்துக் கொண்டன, அவர்கள் இருவருடைய இதயங்களும்.

"ஆள் நடமாட்டமில்லாத இடத்தில் ஆசிரமம் அமைத்து வாழவா போகிறீர்கள்? அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருந்தாலும் விடமாட்டேன் நான்— ஆகாய விமானமேறித் தொடருவேன்."

"அதிகம் பேசாதீர்கள், சோமு! நான்தான் அவரை அழைத்து வந்தேன்" என்றாள் மோகனா.

"அதுதான் எனக்கே தெரியுமே! சில்லறைக் காசுகளுக்குச் சீரழிந்த உனக்குச்சிங்கார வாழ்வு அமைத்துக் கொடுத்தால், நீ வேறென்னதான் செய்வாய்?"-கோபத்தால் குமுறினான் சோமு.

"என் அழகைக் காசாக்கத்தானே அழைத்து வந்தீர்கள்?"

"பைத்தியக்காரி! உன் அழகுக்கு ஒரு அந்தஸ்தை உண்டாக்கித் தந்தேன். அஞ்சி வாழ்ந்தவளை ஆணவத்தோடு பேசும் நிலைக்குஉயர்த்தினேன். செல்லாக் காசைச் செலவாணியாக்கிச் சில்லறை மாற்றித் தந்த பிறகுதான் அதைச்செலவழிக்க வந்திருக்கிறான் சேகர்!"

"எனக்குச் சினிமாவிலே நடிக்கப் பிடிக்கவில்லை"

"சித்திரமாக இருக்கப் பிடித்திருக்கிறதோ? ஒப்பந்தப் பத்திரத்தில் கையெழுத்துப் போட்டு விட்டாய் என்பது கவனத்தில் இருக்கட்டும். இனி உடன்பாடு இல்லையென்றால் விடமாட்டார்கள்"

அயர்ந்து போனாள் மோகனா. மெல்லச் சோமுவை நெருங்கினாள். அவன் கால்களைப் பிடித்துக் கொண்டு,

"சோமு! எனக்கு இந்த நாசமே உருவான வாழ்க்கை பிடிக்கவில்லை. இதுவரை நடத்தியது போதும், இனி நல்வாழ்வு நடத்த ஆசைப்படுகிறேன். எனக்கு இந்தப் பிச்சையைத் தாருங்கள். வேண்டுமானால் நீங்களே என்னை......"

உரத்த குரலில் சிரித்தான் சோமு!

"மனைவியாக்கிக் கொண்டு மகிழ்ந்திருக்கச்சொல்லுகிறாயா? மூலதனத்தை முடக்கி வைக்கும் முட்டாள் அல்ல நான்!"

நினைவுகளால் அமைத்த மலர்தோட்டம் நிமிடநேரத்தில் நிர்மூலமாக்கப்பட்டதைக் கண்டு கண்ணீர் சிந்தினாள் மோகனா. சோமு இதையெல்லாம் கவனிக்கவில்லை. பதுங்கி நின்ற சேகரனைப் பாயும் புலியைப் போலப் பார்த்தான்.

"சேகர்! குளத்திலே பூத்திருக்கும் தாமரையைச் சித்திரமாகத் தீட்டுபவன் நீ! உன் வீட்டிலே தாமரைக்காகச் சேற்றைக் குவிக்கமாட்டாய் என்பது எனக்குத் தெரியும். நண்பன் என்ற பழைய உறவை மறக்காமல் உன்னைக் கேட்டுக் கொள்ளுகிறேன். தயவுசெய்து போய் விடு. என் வாழ்வை மட்டும் நீ குலைப்பதாக இருந்தால்......... பழிவாங்கும் நாகமாக உருவெடுத்து நீ எங்கு சென்றாலும் படமெடுத்துத் தொடருவேன். உன் குடும்பத்துக்கே மறையாத களங்கத்தை ஏற்படுத்துவேன்"

மௌனம் நிலவிற்று அங்கே. தலைகுனிந்து நிற்கும் சேகரன்—தேம்பியழும் மோகனா — தீப் பொறிகளைக் கக்கி நிற்கும் சோமு! எதிர்காலம் இந்தக் காட்சியைப் பார்த்துச் சிரித்தது. இந்த நிகழ்ச்சியை மிச்ச மீதி கூட இல்லாமல் அழித்தொழித்து, புது உருக்கொடுக்க அது போட்டிருந்த திட்டங்களைத் தெரிந்துகொள்ளாமலே இருக்கும் அந்தத் துர்ப்பாக்கிய ஜீவன்களைப் பற்றி நினைக்க அதற்கு அளவுக்கு மீறிய துக்கம் ஏற்பட்டுத்தான் இருக்க வேண்டும்; எவர் செவிகளிலும் விழாதபடி எள்ளி நகையாடியது அது, அந்த விசித்திரச்சேர்க்கைகளைப் பார்த்து.

[தொடரும்]


குழந்தைப் பத்திரிகை உலகில் ஜெயக்கொடி நாட்ட வருகிறது!

# மிட்டாய்

ஆசிரியர்: ராஜன்

**குழந்தைகளின் மாதமிரு முறை - 32 பக்கங்கள்**
**இரு கலர் அட்டை. சைஸ்: டெம்மி 1/8**
**விலை 2 அணாதான்**

*மிட்டாய்* முற்றிலும் இனிக்கும் கதைகள்! துப்பறியும் கதைகள்! ஒவ்வொரு இதழிலும் ஓர் அழகான சிறு நாவல். 50 ரூபாய் பரிசுப் போட்டி! குழந்தைகளுக்கு இதுவரையில் இந்த மாதிரி சிறந்த பத்திரிகை வந்ததே இல்லை எனப் பாராட்டுவீர்கள். உடனே ரூபாய் மூன்று அனுப்பி உங்கள் குழந்தைகளைச் சந்தாதாராக்குங்கள்.

**முதல் இதழ் 15-2-52-ல் வெளி வருகிறது!**

*வருஷ சந்தா ரூ. 3* — *எங்கும் ஏஜெண்டுகள் தேவை!*

விவரங்களுக்கு:

**மிட்டாய்**
**வெண்ணிலா வெளியீடு**
*37, அரண்மனைக்காரத் தெரு, சென்னை-1*

நீங்கள் வாங்கிவிட்டீர்களா?

# திராவிடர் டைரி-1952

திராவிடர் அனைவரும் பெற்றிருக்கவேண்டிய சிறந்த நாட்குறிப்பு

★

இளைஞர் உலகத்தின் இதயகீதமாக விளங்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தைப்பற்றிய — முழு விவரங்களும் அடங்கிய ஏடு —

★

இந்த ஆண்டின் நாட்குறிப்பில்

★ அறிஞர் அண்ணாவின் பொன்மொழிகள் - 365. புதியவை சிறந்தவை.

★ அண்ணா, சிற்றரசு, நீலமேகம், கருணாநிதி, மணிமொழியார், மனோகரன், என். வி. நடராசன் புகைப்படங்கள்.

★ கழகக் கட்டிடம், கழகக்கொடி - படங்கள்.

★ கழகச் சட்டதிட்டம் - விவரங்கள்.

★ கழகக் கிளைகள் 670ன் செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர், விளம்பர உறுப்பினர்; பெயர்கள் - மாவட்ட வாரியாக. அதுபோலவே, மாணவர் கிளைகளின் செயல் உறுப்பினர்கள் பெயர்கள்.

★ திராவிடர் கொண்டாடற்குரிய திருநாட்கள், தபால், தந்தி விவரங்கள், ரிஜிஸ்ட்ரேஷன் கட்டணங்கள் முதலியனவும் உண்டு.

550 பக்கங்கள் விலை ரூபாய் 1—0—0

★

ஒரு பிரதி வேண்டுவோர் புத்தக அஞ்சலில் அனுப்ப ரூபாய் 1—2—0ம் பதிவுத் தபாலில் அனுப்ப ரூபாய் 1-6-0ம் அனுப்பவேண்டும். விற்பனைக்கழிவு 20% அனுப்பும் செலவு தனி

★

## போர்வாள் அலுவலகம்

பவழக்காரத் தெரு :: சென்னை - 1

# இரண்டு ஆண்கள்

கு. அழகிரிசாமி

என் மாமா ஒரு 'அல்கா'ப் பேர்வழி. சோம்பேறித்தனம், போக்கிரித்தனம், அயோக்கியத் தனம் என்பனபோன்ற குணங்க ளெல்லாம் அவரிடம் வகைக்குக் கொஞ்சம் உண்டு. காரணகாரிய மில்லாமலே, தம்முடைய மோச மான குணங்களில் ஒன்றைக் காட்ட ஆரம்பித்துவிடுவார். எவனுவது ஒருவனுடன் வீண் சண்டை போடாவிட்டால், அன்று அவருக்கு என்னவோ போல் இருக்கும்.

மாமாவுக்கு வயது இருபத் தெட்டு; என்னைவிட நான்கு வயது மூத்தவர். அவருக்கு ஏதோ கொஞ்சம் எழுதப் படிக் கத் தெரியும். வேலை எதுவும் கிடையாது. சாப்பிடவேண் டியது, ஊர்சுற்ற வேண்டியது மடத்தில் துண்டை விரித்துத் தூங்கவேண்டியது, இவரைப் போன்ற ஒரு வேலையற்றவ னோடு உட்கார்ந்து தாயம் விளையாடவேண்டியது— இப்படி யாக அவர் காலத்தை ஓட்டிக் கொண்டிருந்தார். ஆனல் இந்த மாதிரி வாழ்க்கை நடத்துவ தற்குப் பெற்ற தகப்பனே, அல் லது முப்பாட்டனே கப்பல் வியாபாரிகளாக இருக்க வேண்டும். ஆனல் என் மாமா வின் தகப்பனுரோ கப்பல் வியா பாரியுமல்ல; கத்திரிக்காய் வியா பாரியுமல்ல; எட்டு ஏக்கர் கரிசல் மண்ணுக்கு அதிபதி. அவ்வளவு தான். இந்தமாதிரியான மகனை வைத்துக் காப்பாற்ற அவரால் முடியவில்லை. அவன் தவ மிருந்து பெற்ற ஏக புத்திரன் தான் என்ருலும், தண்டச் சோறு போடுவது கையைக் கடித்துவிட்டது. ஒருநாள் அவர் மிகுந்த கோபாவேசத்துடன் அடிக்கக் கூடாத ஒரு சாமானை எடுத்து என் மாமாவின் முகத் தில் எறிந்துவிட்டார். அதனல் வலி ஏற்படாவிட்டாலும் நிச் சயம் அவமானம் ஏற்படும். ஆனல், என் மாமாவுக்கோ இரண்டுமே ஏற்படவில்லை. பெரி யவர் பார்த்தார். அதற்கு மறு நாளே சாப்பாடு போட முடியா தென்று, பிடரியைப் பிடித்து வெளியே தள்ளிவிட்டார். உடனே மாமா தம் தங்கை வீட் டுக்கு, அதாவது எங்கள் வீட் டுக்கு, வந்து சேர்ந்தார். என் தாயார் ஒரு பைத்தியம்; தகப்ப னரோ, ஆஸ்பத்திரியில் சேர்க்க வேண்டிய பைத்தியம். அதனல், "ஐயோ பாவம்!" என்று என் மாமாமீது இரக்கம் காட்டி சாப் பாடு போட்டுக் கொண்டிருந் தார்கள். மாமா எங்கள் வீட்டில் எழுந்தருளியிருந்த இந்தச்

சந்தர்ப்பத்தில்தான், நான் தூத்துக்குடியிலிருந்து வந்துசேர்ந்தேன். ஒரு கல்யாணத்துக்காக நான் தூத்துக்குடிக்குப் போயிருந்தேன்.

மாமா எங்கள் வீட்டில் வந்து மாதக் கணக்கில் முகாம்போட்ட பிறகுதான், என் தகப்பனாருக்கு ஞானோதயம் பிறந்தது. ஒருநாள் பக்கத்துவீட்டுக் கிழவருடன் பேசிக் கொண்டிருந்தபோது, என் தகப்பனார் "எனக்கு மகன் பிறந்ததற்குப் பதிலாக, மகள் பிறந்திருக்கக் கூடாதா? என்வீட்டில் விருந்து சாப்பிடும் மைத்துனனுக்குக் கட்டிக்கொடுத்து அவனை வீட்டோடு வைத்துக்கொள்ளுவேனே. அப்புறம் மைத்துனப் பிள்ளை மாதக்கணக்கில் அல்ல, வருஷக் கணக்கிலேயே என் வீட்டில் இருக்கலாமே! ஆனால், எனக்குப் பிறந்த குழந்தை ஆண் குழந்தையாகப் போய்விட்டதே!" என்றார்.

இந்தச் சொற்கள் காதில் விழுந்தால் மற்றவர்கள் உயிர் வைத்துக் கொண்டிருக்க மாட்டார்கள். ஆனால் என் மாமாவுக்கோ, இந்தச் சொற்களால் ஒரு பெரிய உண்மைமட்டும் புலப்படலாயிற்று. அதாவது, இனிமேல் எங்கள் வீட்டில் சாப்பிட்டுக்கொண்டு ஊர் சுற்றுவது நடக்காத காரியம் என்று கண்டு பிடித்துக்கொண்டார்.

அதனால் அன்று முதல், என் தாயாரின் கையால் சாதம் வாங்கிச் சாப்பிட வெட்கப்பட்டு, வீட்டில் என்னைத் தவிர வேறு யாரும் இல்லாத சமயம் பார்த்து, தமக்குத் தாமே சாதத்தை எடுத்துப் போட்டுக்கொண்டு சாப்பிடத் தொடங்கினார். நான் அவரை ஒன்றும் சொல்லமாட்டேன். எனக்கு அவர்மீது ஏதோ ஒரு பிரியம். என்மீதும் அவருக்கு உண்மையிலேயே அளவுகடந்த அன்பு. அவர் வேடிக்கையாகப் பேசுவதும், வேடிக்கை என்று நினைத்துக்கொண்டு அசட்டுத்தனமாக உளறுவதும், மணிக்கு ஒரு தினுசாகக் கோணிக்கோணி நடப்பதும், பெரிய மனிதனைப் போல எனக்குப் புத்திமதி சொல்லுவதும் எனக்குப் பிடித்துப்போய்விட்டன.

சில நாட்களாயிற்று. ஒரு நாள் எங்கள் ஊரில் உள்ள ஒரு கன்னிப்பெண்ணைப் பார்த்து, "உனக்கும் கல்யாணமாகவில்லை. எனக்கும் கல்யாண மாகவில்லை. நம் இரண்டுபேருக்கும் எப்பொழுது கல்யாணம் ஆகப் போகிறதோ!" என்று சிலேடைப் பொருளில் சொல்லியிருக்கிறார். இது ஒரு பெரியசண்டையையே இழுத்துக்கொண்டு வந்துவிட்டது. பெண்ணின் தாயார், ஆவுடையம்மாள் என்ற பெயருடையவள், எங்கள் வீட்டு முற்றத்தில் வந்து நின்று உடம்பெல்லாம் வாயாகக் கத்தினாள்.

என் மாமாவோ மிகவும் கம்பீரமாக எழுந்து வந்து, "ஏய் பெரியமனுஷி! வாயை மூடு. உன் மகளைப்

அட்டைப்படக்கதை

பார்த்து நான் என்ன சொன்னேன்? நம் இரண்டு பேருக்கும் எப்பொழுது கல்யாணம் ஆகப் போகிறதோ என்று தானே சொன்னேன். இரண்டு தனித் தனிக் கல்யாணங்களைத்தான் நான் சொன்னேனே ஒழிய ஒரு கல்யாணத்தைச் சொல்லவில்லை.'' என்று சொல்லிவிட்டு அத்துடன் நிறுத்திக்கொள்ளாமல் "அப்படியே சொன்னேன் என்று வைத்துக்கொள்ளுவோம். என்னைவிட உயர்ந்த மாப்பிள்ளை உன் மகளுக்கு வந்துவிடப் போகிருனே? நானும் பார்க்கத்தானே போகிறேன்'' என்று அழுத்திச் சொன்னர்.

பெண்ணைப் பெற்ற வயிற்றில் தீப்பிடித்துக்கொண்டது ஆவுடையம்மாள் கோபத்தினல் பேசிய பேச்சை இம்மட்டு அம்மட்டு என்று சொல்லமுடியாது. அன்று எப்படியோ சண்டை ஓய்ந்தது.

இரவு படுத்துக்கொள்ளப் போகும்போது மாமா என்னை ரகசியமாக அழைத்து, "ஏண்டா நான் இன்று போட்ட போடு எப்படி!'' என்ருர்.

"ஆஹா!'' என்றேன் நான். நான் பாராட்டுகிறேன் என்று நினைத்து அவர் பூரித்துப் போனர்.

மறுநாள் விடிந்ததும், என் தகப்பனர் மாமாவை அழைத்து, "ஐயா! நீ மகராசனய் இருப்பாய்! என் மேலே கொஞ்சம் இரக்கம் வைத்து, என் வீட்டை விட்டுக் கிளம்பி விடு அப்பா!'' என்று சொல்லிக் கையெடுத்துக் கும்பிட்டார். அம்மா என்னவோ சொல்லிக்கொண்டு குறுக்கிட்டாள். நானும்கூட அப்பாவைத் தடுத்தேன். ஆனல் ஒன்றும் பலிக்கவில்லை.

மாமா வீட்டைவிட்டுக்கிளம்பி விட்டார். அப்புறம் அவர் ஊரை விட்டே கிளம்பிவிட்டார் என்று மாலையில் தெரியவந்தது. நான் மிகவும்வருத்தப்பட்டேன். அவர் எங்கே போனர் என்று தெரியவில்லை. அவருடைய பிரிவுக்காக நானும் என் தாயாரும் வருந்தாமல் இருக்க அவர் ஒரு தந்திரம் செய்துவிட்டுப் போய் விட்டார். அது என்னவென்ருல் பக்கத்து ஊரில் எங்களுக்கு ஒருவர் ஆறுரூபாய் கடன் தர வேண்டும். அங்கே போய் என் தாயார் கேட்டதாகச் சொல்லி, பணத்தைக்கேட்டு வாங்கிக் கொண்டு மாமா கம்பி நீட்டிவிட்டார். இந்தக் காரியத்தைச் செய்த பிறகு அவர் பிரிவுக்காக நானும் என் தாயாரும் வருந்துவதற்கு வழியில்லாமல் போய்விட்டது.

## 2

மூன்று மாதங்களாகிவிட்டன, ஒருநாள் எனக்கு ஒரு கவர் வந்தது. வாங்கி உடைத்துப் பார்த்தேன். மாமா எழுதிய கடிதம் தான் அது. அதில் அவர் எழுதியிருந்ததில் சில பகுதிகளை அப்படியே கீழே கொடுத்திருக்கிறேன்.

"என் அருமை மருமாகனுகிய செல்லையாவுக்கு, நானு

கிய மாமா எழுதிக்கொள்வது என்னவென்றால்......

நான் இப்போ மிலிட்டரியில் சேர்ந்திட்டேன். மாசம் சோறு துணி மணி போக 18-ரூவாய் சம்பழம்.........

மாசாமாசம் உன் தாயாற் பேருக்கு ரூவாய் அனுப்புகிறேன். சேர்த்து வைக்கவும். எனக்கும் கலியாணம் காச்சி என்று ஆகணுமல்லோவோ?..

எனக்கு நம் தமிளப்பெண் பிடித்தமில்லே. எதுக்கும் நான் வந்த பெறகு கலியாணத்தை ஓசித்துக்கொள்வோம். அடிக்கடி கடிதம் போடு. நான் மூணுமாசத்துக் கப்பிறம் லீவில் வருவேன்...'

நான் பதில் கடிதம் போட்டேன். அவரும் கடிதம் போட்டார். இப்படியே கடிதப்போக்குவரத்து ஒழுங்காக நடந்து கொண்டு வந்தது.

மூன்று மாதத்துக்குப் பிறகு அவர் எழுதியிருந்த ஒரு கடிதத்தில், "நான் அடுத்த வாசம் வருகிறேன்" என்று எழுதியிருந்தார்.

நான் அவர் வருகையை ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டே இருந்தேன்.

## 3

அன்று ஏதோ ஒரு கிழமை. உத்தியோகம் பார்க்காமல் நாட்டுப்புறத்தில் இருப்பவனுக்குக் கிழமையைப் பற்றிக் கவலை எதற்கு? நல்ல வெயில். நான் வாசல் திண்ணையில் படுத்துக் கொண்டு, பத்திரிகை படித்துக் கொண்டிருந்தேன். திடீரென்று வீதி முனையில் சிறுவர்களின் ஆசவாரம் கேட்டது. ஒரு நாலைந்து நாய்கள் சேர்ந்து கன்னா பின்னா என்று குரைக்கத் தொடங்கிவிட்டன. ஊருக்குள் கரடியோ புலியோ நுழைந்து விட்டது போல ஒரே கூப்பாடு. நான் திண்ணையை விட்டுக் கீழே குதித்து எட்டிப்பார்த்தேன். வீதியின் இருபுறங்களிலுமுள்ள வீட்டு வாசல்களில் ஆண்களும் பெண்களுமாக நின்று வீதிமுனையைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். சிறுவர்கள் பின்னே வர, நாய்கள் முன்னே குரைக்க இரண்டு சிறுவர்கள் ஆசையின்



காரணமாகப் பெட்டி படுக்கைகளைத் தங்கள் தலைமேல் சுமந்து வர, என் மாமா காக்கி உடையோடு, வலது கையில் சிகரெட் டப்பாவும், இடது கையில் கொளுத்திய சிகரெட்டுமாக புகை ஊதிக்கொண்டு, ராஜநடை போட்டு இருபுறமும் பார்த்துக் கொண்டே நடந்துவந்தார். நான் எதிர்கொண்டழைக்கச் சென்றேன்.

என்னைப் பார்த்ததும், "க்யாரே, கைரியத்தோ ஹை? க்யா கர்ரஹே ஹோ?" என்று கேட்டார்.

அவர் பேசியது எனக்கு விளங்கவில்லை. "என்னசொல்லுகிறீர்கள்?" என்று கேட்டேன்.

"சௌக்கியமாக இருக்கிறாயா என்று கேட்டேன். நீ பி.ஏ. படித்தும் இந்துஸ்தானி தெரியவில்லையே! முஜே தேக்கோ, மைம்கிஸ்தரஹ்போல்தா ஹூம்" என்று மிடுக்காகச் சொன்னார்.



"கர்மே அம்மா சௌக்கியமா! என்க்கித் தமிழ் மறந்து போச்சு!" என்று சிரித்துக் கொண்டே பெருமையோடு சொன்னார்.

தெருவில் உள்ளவர்களில் பாதிப்பேர், நின்ற இடத்தில் நின்று இந்தக் கண்காட்சியை அனுபவித்துக் கொண்டிருந்தார்கள். மீதியுள்ளவர்கள் வேடிக்கை பார்ப்பதற்காக எங்கள் வீட்டுக்கே வந்துவிட்டார்கள். மொத்தத்தில் வீடு பிடிக்காத கூட்டம். முதல் முதலில் எங்கள் ஊரில் ராணுவத்துக்குப் போய்த் திரும்பியவர் இவர்தாம். அதனால் ஒவ்வொருவரும் குழந்தைகளைத் தூக்கிக் கொண்டுவந்து என் மாமாவைப் பார்த்தவண்ணம் நின்றுகொண்டிருந்தார்கள். சிலர் குடும்பசகிதமாகவே வந்து விட்டார்கள். அநேக சிறுவர்கள் அன்று மத்தியானம் பள்ளிக் கூடத்துக்குப் போகவில்லை.

ஒரு கிழவர் வந்து என் மாமாவிடம், "தம்பி இப்போது எந்த ஊரிலிருந்து வருகிறது?" என்று கேட்டார். 'வருகிறாய்' என்று கேட்க அவருக்குவாய்வரவில்லை.

"சிட்டகாங்கிலிருந்து வருகிறேன், தாத்தா"

"அது எங்கே இருக்கிறது? மதுரைக்கு வடக்கே தானே?" என்றார் கிழவர்.

என் மாமா அமர்க்களமாகச் சிரித்துக்கொண்டு, "மதுரையா? பழையகாலத்துப் பைத்தியங்கள்! சிட்டகாங் இங்கிருந்து இருவதினாயிரத்து முந்நூறுமைல்" என்று ஒரு போடு போட்டார்.

"அடேயப்பா!" என்று ஏக காலத்தில் சுமார் பத்துப்பேர் வரை பிரமித்தார்கள்.

அந்தக் கிழவர் "தம்பி மதுரைக்கு வடக்கேயெல்லாம் போய்ப் பார்த்துவிட்டு வந்துவிட்டதே!" என்று பல தடவைகள் திரும்பத் திரும்பச் சொல்லி ஆச்சரியப்பட்டார்.

மாமா ஒரு சிகரெட்டை எடுத்துக் கொளுத்தினர்.

ஒரு பெண் "சிட்டகாங்கிலிருந்து இங்கே வர எத்தனை நாள் பிடிக்கும்?" என்று கேட்டாள்.

"ஒன்றரை மாதம்!"

"ரயிலில் தானே வரவேண்டும்?"

"ரயிலில் முப்பதுநாள்; கப்பலில் முப்பது நாள்!"

என்னல் தாங்கவே முடியவில்லை. அந்த இடத்தில் அவருடைய அபிப்பிராயத்தை எதிர்த்துச் சொன்னல், அந்த ஊர்க்கூட்டம் முழுவதும் என் மேல் பாய்ந்துவிடும். எல்லோரும் மாமாவின் வாக்கை வேத வாக்காக ஏற்றுக்கொண்டிருந்தார்கள்.

மாமா அங்கே ஒரு அம்மாள் இடுப்பில் வைத்துக்கொண்டிருந்த ஒரு குழந்தையை வாங்கிகொண்டு, அதனேடு இந்துஸ்தானியில் பேச ஆரம்பித்துவிட்டார். இதைப் பார்த்து மகிழ்ச்சிப் பெருக்குடன் எல்லோரும் சிரித்தார்கள்.

கிழவர் வாயைத் திறந்து, "சிட்டகாங்கு, சீமைக்கு அந்தப் பக்கமா? இந்தப் பக்கமா?" என்று தம் கடைசிச் சந்தேகத்தைக் கேட்டார்.

நான் குறுக்கே தலையிட்டு, "இந்தியாவில் தான் சிட்டகாங் இருக்கிறது" என்றேன்.

"போடா பூல்! இந்தியா எங்கே? சிட்டகாங் எங்கே? பி. ஏ. படித்துவிட்டாளும் பி.ஏ. உன்னைப்போலப் படித்தவனெல்லாம் மிலிட்டரியில் ஆயிரம், இரண்டாயிரம் என்று சம்பளம் வாங்குகிறுன். நீ என்னடா என்ருல் பட்டிக்காட்டில் உட்கார்ந்து வாயளப்பு அளந்து கொண்டிருக்கிருய்!" என்ருர்.

அத்தனை கூட்டமும் என்னை மிக ஏளனத்தோடு பார்த்தது. என் எண்சாணுடம்பு ஒரு சாணுகக் குறுகிவிட்டது. மூச்சுப் பேச்சில்லாமல் வீட்டுக்குள்ளே வந்துவிட்டேன்.

சிறிது நேரத்தில் என் தகப்பனர் தோட்டத்திலிருந்து வந்து சேர்ந்ததால் இந்த வேடிக்கைக் கூத்து முடிவடைந்தது. எல்லோரும் அவரவர் வீடுபோய்ச் சேர்ந்தனர். மாமா என் தகப்பனருடன் ஏகதேசமாக இந்துஸ்தானியில் பேசத் தொடங்கினர். தகப்பனருக்குக் கோபம்வந்து அவரைக் கொஞ்சம் மட்டம் தட்டிவிட்டார். அப்புறம்தான் மாமாவுக்குப் புத்தி வந்தது.

மாமா குளித்துச் சாப்பிட்டார். பிறகு என்னேடு வந்து வாசல் திண்ணையில் உட்கார்ந்து கொண்டு, ஆங்கில தினசரிப் பத்திரிகையை எடுத்துப்'படிக்க' ஆரம்பித்தார்.

தகப்பனாருக்குக் கோபம்வந்து விட்டது. என் மாமாவை எரிச்சலோடு பார்த்தார். "ஐயா! முதலில் தமிழ்ப் பேப்பர் வாசிக்கப் படி! அப்புறம் இங்கிலீஷ் பேப்பர் வாசிக்கலாம்!" என்று ஒரு சூடுகொடுத்தார். மாமா பெட்டிப் பாம்பாக ஒடுங்கிவிட்டார். சிறிது நேரத்தில் அவருடையே பெற்றோர்கள் வந்து வற்புறுத்தி அழைத்ததன்பேரில் தம் வீட்டுக்குச் சென்றார் மாமா.

★

அன்று மாலை நாங்கள் இருவரும் உலாவக் கிளம்பினோம். மாமா தன் விகாரமான கிராப்பை மேலும் அதிகமாக விகாரப் படுத்தினார்; அதாவது தலை வாரினார். முன் பக்கத்தில் சாண் நீள மயிரும், பின் பக்கத்தில் முழு சவரமுமாகக் கத்தரித்து விடப்பட்ட அந்தக் கிராப்பும், அவர் வைத்திருந்த கில்லாடி மீசையும், இரண்டு காதுகளிலும் இரண்டு அரை ரூபாய் நாணயங்களைச் செருகி வைத்துக்கொண்டதும், வலது காதில் சிகரெட் கட்டையும், முகத்தில் துலாம்பரமாகத்தெரியும் பவுடருமாகப் பவனிகிளம்பினார்மாமா. எனக்கு அவர் கூடப்போகவே அவமானமாக இருந்தது. அவருக்கோ என்னை அழைத்துச்செல்ல அவமானமாக இருந்தது. இருந்தாலும் வேறு வழியின்றி ஊர் மந்தையை நோக்கி நடந்தோம்.

எங்கள் ஊரில் உள்ள பெரிய மனிதர்கள், பஞ்சாயத்துக்காரர்கள், பணக்காரர்கள் அத்தனை பேரும் மாமாவைப் பார்த்து மரியாதை செய்தனர். சில கல்யாணமான பெண்கள் ஏற்கெனவே தமக்குக் கல்யாணமாகி விட்டதற்காக வருத்தப்படுகிறவர்கள் போல என் மாமாவிடம் நடந்து கொண்டார்கள். கல்யாணமாகாதவர்கள் அன்பு ததும்பப் பேசினார்கள். முன்னால் இவரைப் பார்த்து, 'சீசீ!' 'தூதூ!' என்றவர்களெல்லாம் இவருக்கு ராஜ மரியாதை கொடுத்தார்கள். இவையெல்லாம் எனக்கு நம்ப முடியாத அதிசயங்களாக இருந்தன.

ஊரைவிட்டுத் தனியாக ஓரிடத்தில் வந்து உட்கார்ந்தோம்.

"வேற்று ஆண்களோடு பேசியறியாத பெண்களெல்லாம் கூட உங்களோடு பிரியமாகப் பேசுகிறார்களே!" என்றேன்.

"பூ, இது என்ன பிரமாதம்! சிட்டகாங்கில் ஆனைப்பட்ட வெள்ளைக்காரிகளெல்லாம் என் காலைக் கட்டிக்கொண்டு கிடப்பார்கள்; தெரியுமா?" என்றார் மாமா.

எனக்கு அவர்மீது உண்மையிலேயே வெறுப்பு உண்டாகிவிட்டது. அதற்கப்புறம் நான் அவரிடம் அதிகமாகப் பேசவில்லை. அரைமணி நேரத்துக்குள்ளேயே வீட்டுக்குத் திரும்பிவிட்டோம்.

## 4

மாமா ஊருக்கு வந்து பதினைந்து நாட்களாகி விட்டன. பழையபடியும் சிட்டகாங்குக்கு

புறப்பட்டார். போகும்போது, எனக்கு ஒரு பெல்ட், ஒரு பவுடர் டப்பா, தந்தத்தினால் செய்த ஒரு சிகரெட் பெட்டி ஆகியவற்றைக்கொடுத்துவிட்டுச் சென்றார்.

இவர் விடுமுறையில் வந்து போனது ஊருக்குள் சில மாறுதல்களை உண்டாக்கிவிட்டது. அவையாவன: எங்கள் ஊரில் மூன்று வாலிபர்கள் ஒரு சில நாட்களில் ராணுவத்தில் சேர்ந்துவிட்டார்கள். முன்னால் சண்டைக்கு வந்த ஆவுடையம்மாள் தன் மகளை என் மாமாவுக்கே கல்யாணம் செய்து கொடுக்க முயற்சி செய்துகொண்டிருந்தாள். எனக்கு ஊரிலுள்ள பெரியவர்கள் மீதும், பெண்கள் மீதும் இருந்த மதிப்பு அடியோடு போய்விட்டது.

ஒரு காலத்தில் ஊரோடு என் மாமாவைக் 'காலிப்பயல்' என்று பழிதூற்றிவிட்டு இன்று ஒவ்வொருவரும் அவரை மரியாதை செய்ததும், உத்தமமான குணம் படைத்த இளம்பெண்கள் கூட அவரை வளைய வளைய வந்ததும் எனக்கு விபரீதமாகத் தோன்றின. "காலித்தனமாக நடந்து கொள்கிறவனுக்குத்தான் காதலும் கண்ணியமும் கிட்டும் போல் இருக்கின்றன" என்று கருதத் தலைப்பட்டேன். இதனால் என் மனப்போக்குத் தலைகீழாக மாறிவிட்டது.

## 5

ஒருமார் ஒரு மாதந்தான் கழிந்திருக்கும். என் புத்தியில் கறை பிடிக்க ஆரம்பித்து விட்டது நான் அப்போது இருபத்து நான்கு வயது வாலிபன். படித்துப் பட்டம்பெற்றவனானதால், கண்ணியமாக நடந்து கொள்ளுவேன். பெரிய மனிதர்களிடந்தான் பேசுவேன்; பெண்களைக் கண்ணெடுத்தும் பார்க்கமாட்டேன். யார் வீட்டுக்காவது போனால், ஆண்களும் பெண்களும் படித்தவன் என்பதற்காக என்னை மரியாதையோடு வரவேற்பார்கள். நானும் அதற்குத் தக்கபடி நடந்து கொள்ளுவேன். ஆனால் மாமா வந்து சென்றபிறகு என் பண்புகளை நானாகவே மாற்றிக்கொண்டேன்.

"மாமாவை விட நான் நல்லவன்; அவரை விட நான் அழகானவன்; அவர் படிக்காத முட்டாள்; நான் பட்டதாரி. ஆனால் ஊரில் உள்ள அழகான பெண்கள் அவரைத்தான் காதலிக்க விரும்புகிறார்கள்; தாய்மார்கள் அவருக்குத்தான் பெண் கொடுக்க விரும்புகிறார்கள். நான் சொத்து சுகமுடையவன் என்பதையும், அவர் மாதம் பதினெட்டு ரூபாய் சம்பளக்காரன் என்பதையும் தெரிந்து கொண்டே பெண்கள் அவரை மோகிப்பது ஏன்? நான் கல்யாணம் செய்துகொள்ள விரும்பி தெற்குத் தெருப் பெண்ணை நெடுநாள் நேசித்து வந்தும் அவள் என் காதலை இன்றுவரையிலும் பொருட்படுத்தாத காரணம் என்ன?" இப்படியெல்லாம் யோசித்தேன். கடைசியில் 'நல்ல

வனுக்குக் காலமில்லை; நாமும் போக்கிரி போல நடந்து கொண்டால் தான் இன்ப வாழ்க்கைகிட்டும்' என்று துணிந் தேன். அவ்வளவுதான்; அதன் பிறகு, என் மாமாவைப் போலவே நடந்துகொள்ள ஆரம் பித்தேன். அவரைப் போல விகாரமாகக் கிராப்பைக் கத்த ரித்துவிட்டு, அரை மீசையும் வைத்துக் கொண்டேன். சிக ரெட் பிடிக்கப் பழகினேன். அவரைப்போலவே காலெடுத்து வைத்து நடக்கவும், அவரைப் போலவே வாயைக் கோணிக் கொண்டு பேசவும் தொடங்கி னேன். காக்கிச்சட்டை உடை ஒன்றைத் தவிர மற்ற அம்சங் களில் எனக்கும் மாமாவுக்கும் தோற்றத்தில் வித்தியாசமில்லை. ஆனால் அவரைப்போல ஊர்ப் பெண்களோடு பேசத் துணிவு மட்டும் எனக்கு ஏற்படவில்லை. இதற்காக நான் மிகவும் வருத் தப்பட்டேன்.

என் புதிய கோலத்தை என் தகப்பனார் வெறுத்தார்; ஊர்க் காரர்களும் வெறுத்தார்கள். நான் எதிர்பார்த்தது போல் அவர்கள் எனக்கு மரியாதை செய்யவில்லை. பெண்களும் என் னோடு பிரியமாகப் பேச வர வில்லை. அதற்குப் பதிலாக ஊருக்குள் நேர்விரோதமான வரவேற்புத்தான் எனக்குக் கிடைத்தது.

சிலர் என்னைக் கூப்பிட்டுப் புத்திமதி சொன்னார்கள். உட னொத்த வாலிபர்கள் என்னைப் 'போக்கிரிப் பயல்' என்றார்கள். பெண்களே என்னைப் பார்த்த தும், வேறுபுறமாகத் திரும்பிக் காரித் துப்பிவிட்டுச் சென்றார் கள். ஒரு சில தினங்களுக் குள்ளேயே இரண்டொருவர் என் தகப்பனாரைச் சந்தித்து, "பையனைக் கொஞ்சம் கண் டித்து வையுங்கள். தங்கமான பிள்ளையாக இருந்தவன், இப் படிக் குட்டிச்சுவராகப் போய் விட்டான். காலாகாலத்தில் நாம் கண்டிக்காவிட்டால், பையன் காலிப் பயலாக மாறிவிடுவான்" என்று சொல்லிவிட்டுச் சென் றார்கள்.

ஒருநாள், ஒரு பெண்ணைப் பார்த்து பணம்கொடுக்கல்-வாங் கல் சம்பந்தமாக ஏதோ கேட்க வேண்டியிருந்தது; கேட்டேன். அவள் மிகவும் கோபத்துடன், "போக்கிரிப் பயலே! கல்யாண மாகாத பெண்ணோடு உனக்கு என்னடா பேச்சு! இனிமேல் ஏதாவது பேசினால் நாக்கை ஒட்ட அறுத்துவிடுவேன்" என்று சீறினாள். எனக்கு உயிரே போய்விட்டது. செத்த பிணம் போல வீடு வந்து சேர்ந் தேன். அன்றிரவு சாப்பிடவே முடியவில்லை. அவமானத்தினால் உறக்கமும் வரவில்லை. என் பரி தாப நிலைக்காக நான் கண்ணீர் சிந்தி அழுதுவிட்டேன். இப் படிப்பட்ட அவமானங்களைத் தாங்கிக்கொள்ளும் தனிப் பெரும் சக்தி இந்த உலகத்தி லேயே என் மாமா ஒருவருக்குத் தான் உண்டு. நானோ ஊரை விட்டே கிளம்பத் திட்டமிட்டு விட்டேன்.

இரவெல்லாம் ஒரே மன உளைச்சல்; ஒரே சிந்தனை; இது என்ன புதிர் என்று புரியவில்லையே! மாமாவும் ஆண்தான்; நானும் ஆண்தான். ஆனால் அவருடைய அல்காத்தனத்தை மோகிக்கிறார்கள்!—என் அல்காத்தனத்தை வெறுக்கிறார்கள்! இவ்வாறு என்னென்னவோ யோசித்துக்கொண்டிருந்தேன். உறங்குவதற்கு முன்பு, "அல்காப் பேர்வழிகளைக் காதலிக்க விரும்பும் பெண்களும் கூட, நல்லவன் அல்காத்தனமாக மாறுவதை வெறுப்பார்கள் போலிருக்கிறது!" என்று நினைத்துக் கொண்டேன். உண்மையும் அதுதான் என்று பின்னால் விளங்கி விட்டது.

அடுத்த நாள்முதல் அந்த ஊரிலேயே எனக்கு இருக்கப் பிடிக்கவில்லை. வெகு சீக்கிரத்தில் ராணுவத்தில் சேர்ந்துவிட்டேன். பெற்றோர்கள் தடுப்பார்கள் என்ற பயத்தினால் ஒருவரிடமும் சொல்லிக்கொள்ளாமல் போய் நல்ல உத்தியோகத்தில் சேர்ந்துகொண்டேன். ரயிலேறிய தினத்துக்கு முதல் நாள் இரவு என் தினசரிக் குறிப்புப் புத்தகத்தில் பின்வருமாறு எழுதி வைத்தேன்.

"நான் பிறந்த இந்த ஊரை விட்டு நாளைக் காலையில் பிரியாத மனத்தோடு பிரியப்போகிறேன். எப்பேர்ப்பட்ட ஊர்! எவ்வளவு நல்ல மனிதர்கள்! நான் கெட்டுப் போகக் கூடாது என்பதில் இவர்களுக்கு எவ்வளவு அக்கறை! ஆனால், இந்தப் பெண்கள் எதற்காக என் மாமாவை நேசித்தார்கள்? காரணம் இதுவாகத்தான் இருக்க முடியும்: பிறந்த நாளிலிருந்து வெளியுலகத்தை அறியாத பெண்கள் இவர்கள்; அத்துடன் ஆடம்பரச் செலவு செய்யவோ, ஆடம்பரங்களைக் கண்ணாரக் காணவோ முடியாத ஏழைகள். இப்படிப்பட்ட வாழ்க்கை நிலையில் வளர்ந்தவர்களானதால், வெளியுலகத்திலிருந்து வந்து சேர்ந்த ஒரு சாதாரணப் பகட்டுக் கூட இவர்கள் புத்தியைப் பறிகொண்டு விட்டது. நல்லொழுக்கத்தை உயிரைப் போலப் பாதுகாத்து வந்து, அடுத்தவனின் நல்லொழுக்கத்தில் கூடக் கண்ணும் கருத்துமாக இருந்த இந்த இளம் பெண்களின் தூய உள்ளம், கேவலம் ராணுவ உடையையும், சோப்புப் பவுடரையும், நாலைந்து பிறமொழிச் சொற்களையும், ஒருவனுடைய நெடுந்தூர ரயில் பிரயாணத்தையும் கண்டு மிரண்டுவிட்டது. அதனால், போக்கிரியின்மீது கூட இவர்களுக்கு மோகம் பிறந்தது. இந்தக் கிராமத்திலும், இதுபோன்ற லட்சக் கணக்கான கிராமங்களிலும் மனித வாழ்க்கை எவ்வளவு பரிதாபகரமாக இருக்கிறது என்பதற்கு இதுவும் ஒரு சான்று. இல்லையென்றால், அற்பமான பொருள்களும், அற்பத்தனமான ஆடம்பரமும் இவர்களின் உன்னதமான பண்புகளை, உயர்ந்த ஒழுக்கத்தை இவ்வளவு எளிதில் தகர்த்திருக்க முடியுமா? பாவம்! அப்பாவிப் பெண்கள்! ஆனால், நல்ல பெண்கள்! ஆம், மிக மிக நல்ல பெண்கள்!"

# முடியாத கதை

பெரி. சிவனடியான்

எதிர்வீட்டுப் பலகணியின் கதவி ரண்டும்
இருந்தபடி இருக்காமல் திறக்கும் சாத்தும்
சதிராடு மென்னிமைகள் அதனைக் கண்டு
தன்தொழிலை நிலையாக நிறுத்தும்; பார்க்கும்
புதிர்போடும் கதவுகளைப் பார்த்துப் பார்த்தென்
பேனாவும் எழுதுதலைப் போக்கி நிற்கும்
உதிராத மலரொன்று சிரித்து மெள்ள
உள்ளிருந்த படிவெளியே முகத்தை நீட்டும்.

புரியாத புதிராகக் கதையில் தோன்றும்
பொல்லாத கற்பனையா யிருக்கும் செய்கை
தெரியாத பெண்ணுநீ உனதெண் ணத்தைத்
தெரிவித்தால் நல்லதெனக் கேட்கத் தோன்றும்
மரியாதை என்றதிரை அதற்குள் வந்து
மறைத்துவிடும் என்வாயை; உணர்ச்சி வெள்ளம்
பரிதாவும் விரைவோடு பாயும்; நெஞ்சம்
படபடக்கும்; வாய்பதறும்; பயமுண்டாகும்.

புகைவண்டித் தொடராக எண்ணக் கோர்வை
புதிதாக ஒன்றன்பின் ஒன்றாய்ச் சேரும்
வகைதெரியா இளமைக்கு வணக்கம் கூறி
வானத்தைப் பார்த்தபடி இருப்பேன்; கையில்
புகைநின்ற சுருட்டின்நுனி விரலை வந்து
பொருந்திஒரு முத்தமிடும்; "ப்பூபூ" வென்று
திகைப்புற்றுத் தூாஎறிந் துணர்ச்சி பெற்றுத்
திரும்புகையில் கதவிரண்டும் திறக்கும் சாத்தும்.

கதைஎழுது மென்னிடத்து முன்னுள் வந்த
கடவுளெனச் சோதனையைச் செய்தாள் நங்கை
கதைவடிவில், கற்பனையிற் கடவுள்; ஆனல்
கண்முன்னே பெண்ணரசி; என்ன செய்வேன்!
இதைப் பொறுக்க முடியாதே; என்போற் காதல்
இடர்ப்படுவோர்க் கேபுரியும் ஆணி னத்தை
வதைசெய்ய வேஇயற்கை படைத்து விட்ட
வனப்புமிகு பொருள்கள்தாம் மகளிர் கூட்டம்

அடுத்தவொரு மணித்துளியி லணங்கைக் கண்டேன்
அவள்கையிற் சிறுகுழந்தை; ஐயோ வென்றேன்
"எடுக்கிவந்த கைக்குழந்தை எனக்குத் தங்கை
என்றிசைத்தீர்" என்பதனைக் குறிப்பாற் காட்டி
அடுக்கிவரும் துன்பத்தை அதிக மாக்க
அணைத்தந்தக் குழந்தையினை முத்த மிட்டாள்.
தொடுத்துவந்த துன்பத்தால் துணிவா லென்கைத்
துண்டதனை விட்டெறிந்தேன்; துடிதுடித்தேன்.

விட்டெறிந்த துண்டதனைப் பிடித்துக் கொண்டு
வெறுத்தென்பா லெறிந்தாளா? இல்லை; இல்லை
கிட்டரிய மெல்விரலால் நூலைக் கோத்துக்
கிளிநிறத்தி லென்பெயரைப் பின்னிப் போட்டாள்.
தொட்ட இடம் குளிருதெனத் துண்டெடுத்துத்
தோட்புறத்தி லணிமார்பில், முகத்தில் சேர்த்தேன்.
கட்டழகி காதலிலே கருத்தை ஊன்றக்
கதைமுடிந்த பாடில்லை; என்ன செய்வேன்?



# பாதுஷாவின் காதல்

இளமைப்பித்தன்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

மகபத்கானுடைய கட்டளைகளுக்குப் பணிந்து கிடந்தது ஒரு சிறு படை. அதன் உதவி கொண்டு நள்ளிரவில் அங்கே வந்து சேர்ந்தான் அவன். கூடாரத்திற்குள் ஓசைப்படால் நுழைந்து பார்த்தான். ஜஹாங்கீரும் நூர்ஜகானும் ஒரு மெல்லிய பஞ்சணையின்மேல் படுத்துச் சுகமாகத் தூங்கிக்கொண்டிருந்தார்கள். அவர்களுக்குப் பக்கத்தில் பெரிய 'லாந்தர்' விளக்கு மங்கலாக எரிந்துகொண்டிருந்தது.

மகபத்கான் வாளை உருவி அதன் நுனியால் விளக்கின் ஒளியைப் பெரிதாக்கிவிட்டான்.

ஜஹாங்கீர் மெள்ளக் கண் விழித்துப் பார்த்தான். அவனுக்கு முதலில் ஒன்றுமே புரியவில்லை. மகபத்கான் கையில் பிடித்திருந்த வாளின் முனை பளபளப்புடன் மின்னிக்கொண்டு ஜஹாங்கீரின் நெஞ்சின்மேல் வந்து நின்றது. சப்தம் போடாமல் இருக்கும்படி சைகை செய்தான் மகபத்கான். இரண்டு படை வீரர்கள் அவனுடைய கைகளில் விலங்கு பூட்டினார்கள். நூர்ஜகானையும் தூங்கும் பொழுதே கைதியாக்கிவிட்டான்.

நூர்ஜகான் ஒன்றும் புரியாமல் திகைத்து நின்றாள். தயாராக நிறுத்தி வைத்திருந்த குதிரைகளின் மேல் அவர்களை ஏற்றிக்கொண்டு, மின்வெட்டும் நேரத்தில் அங்கிருந்து மகபத்கான் மறைந்தான். மறுநாள் பொழுது விடியும் வேளையில் டில்லியின் பாதுஷாவும், அவனுடைய இன்பராணி நூர்ஜகானும் பஞ்சாபில் சிறைக் கைதிகளாகக்கப்பட்டுப் பாதுகாவலில் வைக்கப்பட்டனர்.

ஜஹாங்கீர் அதைப்பற்றிக் கொஞ்சங் கூடக் கவலைப்படவில்லை. நூர்ஜஹானுடன் வேடிக்கையாகப் பேசிச் சிரித்துக்கொண்டிருந்தான். அவனை அதிர்ச்சி ஒரு பக்கமும், ஆலோசனை ஒரு பக்கமுமாக மாறி மாறி வந்து தாக்கிக்கொண்டேயிருந்தன.

*   *   *

மகபத்கான் அவர்களைப் பார்வையிட வந்தான். எஞ்சியிருந்த குஸ்ருவின் சகாக்கள் அவனைச் சூழ்ந்திருந்தனர். கேலியும் நையாண்டியும் கலந்த மொழிகளை டில்லித் தம்பதிகளுக்குக் காது கேட்கும்படிக் கொட்டிக் குவித்தார்கள். அவர்களை அடக்கி அப்புறப்படுத்திவிட்டு மகபத்கான் பேசலானான்.

"வணக்கம் ஷா-இன்ஷா. உங்களைச் சிறையில் அடைத்ததற்காக நான் மிகவும் வருந்துகிறேன். நாட்டின் சூழ்நிலை இத்தகைய மாறுபாட்டை ஏற்படுத்திவிட்டது."

அவனுடைய பேச்சைக் கேட்டு ஜஹாங்கிர் சிறைக்கூடமே அதிரும்படி சிரித்தான். "மகபத்கான்; நீ நல்ல புத்திசாலி. எதையும் நன்ருக யோசித்துத்தான் செய்திருக்கிருய். நான் இருக்கும் இடம் சிறை அல்ல என்பதை முதலில் தெரிந்து கொள்" என்று சொன்னுன்.

"சிறை இல்லையா?"

"ஆம், சிறைக்கூடம் அல்ல. என்னுடைய நூர்ஜகான் பக்கத்திலிருக்கும்பொழுது இதைச் சிறை என்று எப்படிச் சொல்ல முடியும்? அவளுடன் நான் எங்கேயிருந்தாலும் அந்த இடம் ஒரு புனிதமான புது உலகம். அது சிறையாக இருந்தால் என்ன? அல்லது சித்திரக்கூடமாக இருந்தால்தான் என்ன?"

"ஓ! அப்படியா?"

"அப்படித்தான் நான் நினைக்கிறேன்" என்று கண்டிப்பான குரலில் சொல்லி நூர்ஜகானைத் திரும்பிப் பார்த்தான். அவள் இவை ஒன்றையும் கவனிக்காதவள் போல வேறு பக்கமாகச் திரும்பிக்கொண்டிருந்தாள். மகபத்கான் அவள் பக்கமாகச் சென்று மெள்ளக் கனைத்தான். அவள் அதை லட்சியம் செய்ய



வில்லை. "சுகமாக வாழ்ந்தவர்கள்" என்று சொல்லிவிட்டு நகைத்தான் அவன்.

நூர்ஜகான் அடிபட்ட பெண் நாகத்தைப் போல ஆத்திரத்துடன் திரும்பிப் பார்த்தாள். கண்களில் கனல் தெறித்துக் கொண்டிருந்தது. "மகபத்கான், நீ பேசவேண்டிய இடம் இது அல்ல. அதோ, மன்னர் இருக்கிறார். அவரிடம் போ" என்று கர்ச்சித்தாள்.

"ராணி சாகேப்! பஞ்சாபின் 'தாசீஷா' இந்த மகபத்கான் என்பதை மறந்துவிடவேண்டாம். என் நண்பன் குஸ்ருவைக் கொடுமைப்படுத்திச் சிறை



யில் அடைத்ததைப் போல் என்னையும் சிறையிலடைத்துவிட முடியாது. அவன் குழுவினரைக் கழுவில் ஏற்றிக் கொன்ற மாதிரி என்னையும் என் சகாக்களையும் சாகடிக்க முடியாது. இப்பொழுது நீங்கள் இருவரும் நடைப் பிணங்கள்; நாட்டை ஆள்பவர்கள் அல்ல."

ஜஹாங்கீர் மறுபடியும் சிரித்தான். நூர்ஜகானும் அவனுடன் சேர்ந்து சிரித்தாள். மகபத்கானின் முகத்தில் ஈயாடவில்லை. அங்கிருந்து வேகமாகப் போய் விட்டான். அவர்களுடைய சிரிப்பின் எதிரொலி அவன் மனக் குகையில் நெடுநேரம் வரைக்கும் கேட்டுக்கொண்டேயிருந்தது.

* * *

**நூ**ர்ஜகானும் ஜஹாங்கீரும் மாறுவேடம் பூண்டு சிறையிலிருந்து தப்பி வெளியேறினார்கள். பயங்கரமான இரவின் இருட்திரையின் மறைவில் ஒளிந்து பதுங்கிப் பஞ்சாப்பின் எல்லையைக் கடந்து காபூலுக்கு ஓடிவிட்டனர்.

அங்கே ஜஹாங்கீரும், நூர்ஜகானும் தலை மறைவாக வாழ்ந்து வந்தனர். நாளாக, ஆக ஜஹாங்கீரின் உடல் மிதமிஞ்சிய குடியிலும் உள்ளச் சோர்விலும் குன்றிக் குறுக ஆரம்பித்தது.

எப்படியாவது இந்தியாவுக்குப் போய்விடவேண்டுமென்று ஜஹாங்கீர் ஆசைப்பட்டான். அவனது விருப்பப்படி நூர்ஜகான், அவனை அழைத்துக் கொண்டு மீண்டும் இந்தியாவுக்குள் நுழைந்தாள். லாகூரில் அவர்கள் தங்கியிருந்தார்கள்.

ஒருநாள் இரவு ஜஹாங்கீர், நடமாடச் சக்தியற்றவனாய் மரணப் படுக்கையில் படுத்துக் கிடந்தான். அவனுக்கு அருகில் நூர்ஜகான் சோகம் கப்பிய முகத்



"ரெண்டு நாளா நல்ல அடை மழைபெய்ததுனுலெ வாடிக்கைக் காரங்களுக்கெல்லாம் இல்லேங் காமெ பால் ஊத்திப்பிட்டேன்."

---

துடன் உட்கார்ந்திருந்தாள். நூர்ஜகானை அழைத்து அணைத்துக்கொண்டு ஜஹாங்கீர் சிறு குழந்தைமாதிரி தேம்பித் தேம்பி அழலானுன். "பேகம், நம்முடைய வாழ்நாள் முழுவதும் இன்பத்திலேயே கழிந்தது. இனிமேல் அது அசாத்தியம். என்னைப் பொறுத்த வரையில் 'விடியாத இரவு' இன்னும் சற்று நேரத்தில் விடிந்துவிடும். சாவு என்னைக் கூவி அழைக்கிறது. மரணத்தின் மங்காத ஒளியில் என் உயிர் கலந்து மறைந்து விடும் நூர்ஜகான்......எனக்கு விடை கொடு......உன் மடியின் மேல் என் தலையைச் சாய்த்துக் கொண்டே நான் சாகிறேன்... நிம்மதியுடன் சாகிறேன்...முகலாய சாம்ராஜ்யத்தில் நாம் ஆடிய நாடகம் இன்றுடன் முடிவடைந்துவிட்டது..." என்று நாக்குழற பேசினுன். கண்களின் இமைகள் படபடத்துக்கொண்டன. அவனுடைய உயிர் சற்று நேரத்திற்குள் உடலை விட்டுக் கழன்றோடியது. டில்லியின் சக்கிரவர்த்தி, பேகம் நூர்ஜகானின் மடியில் பிணமாகிக் கிடந்தான்.

நூர்ஜகான் கதறினுள்.

அந்தத் துன்பப் பெருங்குரலின் ஒலி, நாடு நகரங்களெல்லாம் பரவி, அகண்டாகாரமாக ஒலித்து ஒடுங்கியது.

நூர்ஜகானின் வாழ்க்கையில் இருள் கவிந்து வந்து மூடியது. ராஜ்யத்திலிருந்தும் இதர அதிகாரங்களிலிருந்தும் தன்னை விடுவித்துக்கொண்டு தனிமையை விரும்பி ஒதுங்கி நின்றுள். லாகூரில் சக்கரவர்த்தியின் உடல் புதைக்கப்பட்ட இடத்தில் அழகான 'கல்லறை' ஒன்றை எழுப்பி அதைத் தினந்தோறும் தொழுதுகொண்டே நாட்களைக் கழித்துவந்தாள் நூர்ஜகான்.

அவளுக்கு உலகமே கசந்து போய்விட்டது. எஞ்சிய வாழ்க்கையை, தருமத்திலும், உபகாரத்திலும் நனைத்துப் புனிதமான மார்க்கத்தைக் காண முனைந்தாள். வாழ்க்கைச் சக்கரத்தின் சுழற்சியில் நரையும் மூப்பும் அவளை வந்து தொட்டன. அந்தக் கொடுமையான இருட்டிலிருந்து தவித்த அவளுடைய உள்ளம் அருணோதயத்தை எதிர்பார்த்து ஏங்கிக் கொண்டேயிருந்தது.

# ஆ. இது என்ன!?

நாரு

[இரு உதடுகளும் இறுதி வரை ஒன்றோடொன்று இணையாமலே இச்சிறுகதை முழுவதையும் வாசித்துவிடலாம்.]

நாட்டில் எத்தனையோ நிகழ்ச்சிகள் அன்றாடம் நிகழுகின்றன. அவற்றுள் ஒரு சில உள்ளத்தை உருக்குவனவாக உள்ளன. அதைச் சார்ந்த ஒன்று சென்னைச் செய்தியில் வந்தது!

கோவிந்தன் ஏழை. எழுதுதல், வாசித்தல் இன்னதென்றே அவனுக்குத் தெரியாது. அவன் ஓர் தற்குறி. கைரேகை உருட்டுவதில் கைதேர்ந்தவன். உலக நடவடிக்கையில் கடைசி வரிசையில் உள்ளவன். இந்தக் கொள்ளையில் அவன் நாகரிக நகரான சென்னையில் வாழ எண்ணினான், ஒரு துணைவியோடு!

சீதா அனாதை—ஆனால் கவலையற்று இவ்வுலகில் வாழத் தெரிந்தவள். சீதா கோவிந்தனை நன்கு அறிவாள். கோவிந்தனோ சீதாவின் வரலாறே தெரிந்தவன்.



அடிக்கடி அவர்கள் கோவிலுக்கு எதிரில், கடைவீதிகளில், ஓட்டுத் திண்ணைகளில் நாள் தவறாது சந்தித்திருக்கிறார்கள். கோவிந்தன்—சீதா உள்ளங்கள் ஒன்றுபட்டன. ஒருநாள் கோவிந்தன் தந்த தாலியைச் சீதா ஆனந்தத்தோடு வாங்கித் தன் கழுத்தில் அணிந்துகொண்டாள்.

கோவிந்தன்—சீதா, லைலா—கயஸல்ல; ஆனால் சாதாரண இரு உயிர்கள்! அவ்வளவுதான்! இரந்து உயிர் வாழ்வதே அவர்களுக்கேற்ற தொழில்; இந்த உலகு அவர்களுக்குச் சொல்லித் தந்த கல்வி. நாலைந்து வீடுகளுக்கு வாடிக்கையாகச் சென்றுகெஞ்சுவது. அவர்கள் ஏதாவது தந்தால் தெருக்கோடியில் குந்தி வயிற்றைக் கழுவ அவற்றை உள்ளே தள்ளி வாழ்வது—



ஒட்டுத் திண்ணையில் ஒரு ஒதுக் கிடம் கண்டு உல்லாசந் தழுவி உறங்குவது—இதுதான் அதுகள்—அந்தக் கௌரவ ஜீவன்கள் நடாத்திவந்த வாழ்க்கை. இவ்வாறு அவர்கள் வாழ்ந்தனர், செடிகொடிகள் நிலையில்.

காற்று அடிக்கிறது. அக்காலை சிறு சிறு இலை தழைகள், அவற்றோடு செடி கொடிகள் ஆகிய அசைவினங்கள் குலுங்குவதில்லையா? செவ்விதழினை நுகர்ந்துகொண்டே உடுக்கை யிடையாள் இடை துவளாது நகைக்க, அடலேறு அதுகண்டு உரக்க நகைத்தான். இதழோடு கண் வண்டு இணைந்தது. ஒட்டுத் திண்ணை—அங்கே இந்த இரு அனாதைகள் காதல்வானில் சந்தோஷத்துடன் சஞ்சரித்தன. இரவு வருகின்ற நேரத்தில் இந்த உலகு அவர்களுக்கு ஓர் கன்னல் சுனை—காவிய வாவி! ஆனந்தக் கடல்! அதில் வாழ்ந்தனர் அவர்கள். இருவர் வாழ்வின்கண்ணே ஒரே ஒரு குணச்சேர்க்கையே நிறைந்திருந்ததால் அவர்கள் வாழ்வு ஏற்றத்தாழ்வின்றிச் சென்றுகொண்டிருந்தது.

ஆண்டுகள் உருண்டன. சீதா ஒரு ஆண் குழந்தைக்குத் தாயானாள். அக் குழந்தையைச் சந்திரன் என்று அழைத்தனர். சந்திரன் அவர்கள் கண்ணுக்கு, கருத்துக்கு நிறைந்த அழகுள்ளவனாக விளங்கினான். அழகுக்கு அழகு அள்ளித் தந்த காணிக்கையாக அவனை அவர்கள் எண்ணினர்; களித்தனர்.

ஐந்து திங்கள் தெருக்களில் காலியாகவுள்ள வெவ்வேறு ஒட்டுத் திண்ணைகளில், ஒதுங்கிய குடிசைகளில் உருவான சந்திரன் ஆறாவது திங்கள் துவக்கத்தில் குளிர்காய்ச்சல் கண்டு துவண்டான். வறிய நிலையிலுங் கூட இன்னலென்றால் எதுவென்றே அறியாத இளங்காதலர்கள்—உலகில் தோன்றிய நாள்தொட்டுக் கையில் தகரத்தாலடித்த காசு கூட இன்றி வளர்ந்து வந்த அவர்கள் தூய நெஞ்சில் காசுத்தடை குறுக்கிட்டெழுந்தது. வைத்தியர் வீடு ஒவ்வொன்றாக ஏறி இறங்கினர். அங்கே சிலர் ஏசினர். இன்னுஞ் சிலர் ஏளனஞ் செய்தனர். வைத்தியரென்றால் நோயின் வாதையினின்று ஏழைகளை விடுவிக்க வந்தவர்கள் என்ற நினைவு இவர்கள் அகத்தைவிட்டு ஒழிந்தது. இறுதியில் ஒருவர் வழி காட்டச் சர்க்கார்வைத்திய விடுதி ஏகினர். அங்கே சந்திரன் நோய் தீர மூலிகைத் தண்ணீர் வேண்டினர்.

சர்க்கார் வைத்தியநிலையத்தில் சீதா சந்திரனுடன் தங்கினாள். ஏழுநாட்கள் இடைவிடாது கண் விழித்து, வைத்தியர் தந்த கலர்த் தண்ணீரை ஆர்வத்தால் அடிக்கடி ஊற்றிக் கொடுத்து அவனுக்கு வேண்டிய தொண்டு செய்து, சந்திரன் உடல் தேறித் தங்களை இன்னொரு தடவை குறுகுறு விழிகளோடு அவற்றில் சிறுநகை தவழ நோக்குவானா என்று எதிர்நோக்கினர். கோவிந்தன் உள்ளத்தில் சந்தோஷ உணர்ச்சி எள்ளளவுகூட இல்லை. சீதா கவலையால் திணறினாள். வயிறு காலியாகி வெறுங் காற்றுக்கூடாக இருக்கின்ற நிலையில்கூடக் கலங்காத அவர்கள்—இரந்து உயிர் வாழ்வோர்தான்—ஏழைகள் தான்—ஏதுங்கெட்ட அனாதைகள் தான்—ஆனால் அவர்களுக்குரிய ஒரு சிறு உயிர் துடித்துத் துடித்து உயிர் வாழ்ந்து வருதலைக் காணச் சகியாது கொந்தளித்தனர். என்செய்வர்? இதய உணர்ச்சி எள்ளளவுகூட அற்றவரா? இனி எவ்வாறு தேறுவர்?

வைத்தியர்கள் கைவிரித்து விட்டனர். தாயின் வழியாகச் சரியான ஊட்டந் தரத் தவறிவிட்டதால் இனி உடல் தேறுவதரிது என்று தெளிவாகக் கூறிவிட்டனர். இதைக் கேட்டுச் சீதாவை விடக் கோவிந்தனே கவலையின் உச்சியாகத் தோன்றினான்.

கல்வியறிவற்ற கோவிந்தனின் உள்ளத்திலே குழந்தை ஆர்வக் கனல் ஒலிக்காதா? அவன் சிந்தித்தான்; நீண்ட



நேரச் சிந்தனையில் ஆழ்ந்தான். இறுதியில் ஒருநிலைக்கு வந்தான்.

அவன் சிந்தனையின் இறுதி நிலை......?

வைத்திய விடுதியைச் சார்ந்த அந்த வார்டு அனாதையாகக் கிடந்தது. நர்சுகள் வரத்துக்கூட அடியோடு நின்றுவிட்ட நடுநிசி! அந்நேரத்தில் சந்திரனின் நெஞ்சு உயர எழுந்து எழுந்து தணிந்துகொண்டிருந்தது. திடீரென்று அவன் கண்களில் இதுவரை தோன்றாத கவர்ச்சி, அழகொளி வீசிற்று. ஒளி வளர்ந்து காணுவது அதன் இறுதியைக் குறிக்கின்ற அடையாளந்தானே? கோவிந்தனுக்கு இது தெரியாதா? அவன் எண்ணத் தீ கொழுந்துவிட்டெரிந்தது.

"இதோ, ஓரே நாழிகை... அடுத்து... உயிர், சந்திரன் உயிர், அவன் உடலுக்குள் ஓடாது. ஓடவே ஓடாது. சந்திரா...... அய்யோ இழந்தேன்...இழந்தேன், என் உயிரை" என்று வாய்விட்டு அலறினான்.




என்ன தோல்வி!

கோவிந்தன் எண்ணியவாறு சந்திரன் உயிர் இவ் வஞ்சக உலகினின்று தொலையவில்லை. தொலைய வழியில்லை. மூலிகைத் தண்ணீர் எங்கோ ஓரிடத்தில் உணர்ச்சியைத் தேக்கி அவனை வாழவைத்து விட்டது, தற்காலிகத்திற்கு—அதனால் நிரந்தரத் தலைவலியையே கோவிந்தன் ஏற்றான். அன்றிலிருந்து தொடர்ந்து ஏழு நாட்களுக்கு இதே கதை நடந்து வந்தது.

சூடேறச் சூடேறத் தாரோடு இளகுவது எனக் கோவிந்தனின் உள்ளத்தில் உறைந்திருந்த குழந்தை உணர்ச்சி உருகியது. சந்திரனிடத்து அவன் கொண்டுள்ள வாஞ்சைகூடக் கரைந்துவிட்டது. "சாகாது வாடி வதங்கிக்கொண்டிருக்கின்ற சனியன் விரைவில் சாகாதா? செத்துத் தொலையாதா?" என்று இரைந்தான் கோவிந்தன்.

"இது என்ன ஒனக்குத் தலை சுத்துதா— ஏன் உளர்றே? அதோ இறைவன்—அவன் கட்டளை சந்திரனை அழைக்குது—யாரு அந்த வழியை அடைக்க வருவா?" என்று சீதா வேத விளக்கங் கொடுத்தாள்.

"இறைவன்—எங்கு நோக்கினுங் காணாத, உலகில் இல்லவே இல்லாத வருணனை—அதன் கட்டளை—அதனாலே துடித்துத் துடித்து ஒரு இள உயிர் துவளுவதா? இரந்து வாழ்வோனுக்கே இக்கொலையைத் தாங்க வலுவில்லை. இறைவன் எவ்வாறு தாங்குகிறானோ? ஏழைகளுக்கு இரங்காத இறைவன்! அவனுக்கு என் இதயத்தையே அறுத்து வைக்கிறேன். என் இதயத்தை—ஏன், என் சந்திரனை—இந்தா, சர்வவல்ல சனியனே, இறைவனே, ஏற்றுக்கொள்" என்று வெறிகொண்ட நிலையில் சந்திரனைத் தூக்கி நிலத்தில் அறைந்தான்.

உயிர் விலகிவிட்டது, உடைந்த கூட்டிலிருந்து.

சீதா அழுதாள். செய்ததறிந்து கோவிந்தன் அழுதான். டாக்டர் வந்தார். இரங்கினார்.

ஏழைக்கு என்ன நெஞ்சுறுதி! உடைந்த சட்டி என ஒரு சிறு குழவி! நொறுங்கிச் சிதறுண்ட ஏழையின் நிழல்! சந்திரன்! உயிரற்ற கூடு! துண்டான சிரசை உடலோடு சேர்த்து வாரியெடுத்தனர் நர்சுகள்!

"ஆ, இது என்ன" என்று அரற்றியது, அங்குள்ளோர் நெஞ்சு!

ஆ, இது என்ன!-வெறுங்கதை!

# இரு மனம்

எஸ். ஆறுமுகம்

அந்தக் கோடை விடுமுறையில் ஆனந்தனின் வீடு கல்யாண வீடு போலக் கூத்தும் கும்மாளமுமாகக் கலகலத்திருந்தது. ஆனந்தனின் அழைப்பின்பேரில் அவன் தங்கைபார்வதியும் அவள் புதல்வி ராதையும் விருந்தினராக வந்திருந்தார்கள். ஆபீஸ் அலுவல் நிமித்தம் பார்வதியின் கணவன் வரமுடியவில்லை. இவர்கள் மட்டும் வந்தார்கள். இந்த விருந்தினரின் வருகையால் அதிக ஆனந்தம் எய்தியவன் ஆனந்தனின் புதல்வன் கண்ணன்தான். ஏனென்றால் கண்ணனுக்கு விளையாட்டு 'ஜோடி'யாக அங்கு ராதை இருந்தாள்!

ராதையைப் பார்ப்பதற்குள் அவன் எவ்வளவு துடிதுடித்துப் போய் விட்டான்? தினமும் காலண்டரைப் புரட்டிப்பார்த்து 'பள்ளிக்கூடம் கோடைக்குச் சாத்த இன்னும் எத்தனை நாள் இருக்கிறது?' என்று கணக்கிட்டு நாட்களை ஓட்டிய சங்கடம் அவனுக்கல்லவா தெரியும்? பட்டணத்தில் வாசித்துக்கொண்டிருக்கும் ராதையை ஆவல் பொங்க ஆசையுடன் எதிர்நோக்கியிருந்தான் கண்ணன். 'ராதை—ராதை' என்று அந்த ஆசைப் பெயரை ஆயிரம் முறை சொல்லிப்பார்த்து, அதே சுவட்டில் அவளின் 'நினைவுமுகத்தை' நினைவில் கொணர்ந்து மகிழ்ந்தது அப்பிஞ்சு நெஞ்சம்.

வேலை காரணமாக உடன் பிறந்த குடும்பங்கள் இரண்டும் பிரிய நேர்ந்தது. இரு குடும்பங்களுக்குமிடையே விடப்பட்டிருந்த தூரத்தை இட்டு நிரப்பும் அன்புப்பாலமாக — பாசத் தொடராக அமைந்தது அவர்களிடையே நடந்து வந்த கடிதத் தொடர்ப்பு.

கண்ணன் பத்துவயது நிரம்பப் பெற்றவன். ராதைக்கு ஆறுவது ஆண்டு ஆரம்பம்.

அவன் நாலாவது வகுப்பு. அவளுக்கு 'ஆனா—ஆவன்னா' ஏடு தலைகீழ்ப்பாடம்!

கண்ணன் கொஞ்சம் குறும்பு. சும்மா இருக்கவே மாட்டான். ராதையை ஏதாவது 'நிமிட்டி' பண்ணி அழவைத்து வேடிக்கை பார்ப்பதில் அவனுக்கு ஒரு மகிழ்ச்சி. ராதையின் வேண்டுகோளுக்கிணங்க ஆனந்தன் ரேடியோவைத் திருப்பினான், வேண்டுமென்றே 'ஸ்டிரைக்' செய்வான் கண்ணன். உடனே மேலிடத்துக்குத் தாக்கீது தூது செல்லும் ராதையின் சார்பில்.

"நீங்க ரெண்டும் பேரும் எப்படியாவது போங்கள். புருஷனும் பெண்டாட்டியும் இப்போ சண்டை போட்டுப்பிங்க. சற்றுக்கழித்துப்பார்த்தா கூடிக்குலாவிப்பிங்க" என்பான் ஆனந்தன்.

அடுத்த வினாடியில் என்ன மாயமிருக்குமோ, ராதையும்

கண்ணனும் திரும்பவும் கும்மாளம் போட ஆரம்பித்து விடுவார்கள், தம்பதிகளிடையே கணத்தில் தோன்றிக் கணத்தில் மறையும் பிணக்குப் போல.

“அண்ணா, பார்த்தீர்களா? ராதையும் கண்ணனும் ஒருவரையொருவர் நிமிஷங்கூடப் பிரிய மாட்டேன் என்கிறார்கள். இதே போல என்றுமிருந்து, பிறகு அவர்கள் இருவரும் துணைவன்—துணைவியாகவும் ஆகிவிட்டால்......”



உள்ளத்தே துளிர்த்திருந்த ஆசையை வார்த்தைகளாக்கிச் சொக்கும் புன்னகையுடன் கூறிய பார்வதியின் முகத்தில் அந்த ‘ஆனந்தக்கனவு’ நிழலாடியது.

ஆனந்தன் சிரித்தான்.

“பேஷ் பார்வதி. இப்போதே உன் பெண்ணுக்கு ‘வரன் செட்டில்செய்து விட்டாயே...”

★

அன்று......

‘கண்ணா’ என்று அலட்டிய வண்ணம் துள்ளிக் குதித்து வந்தாள் ராதை. மெட்டியொலி கண்ணனின் உறக்கத்தைத் தட்டியெழுப்பியது போலும்! விசித்தெழுந்த அவன் அரைக் கணம் ராதையை அப்போது தான் புதிதாகப் பார்ப்பதுமாதிரி ஏற இறங்கப் பார்த்தான்.



“அத்தான், இந்நேரமா தூங்குவாங்க யாரும்? என்னைப் பாரு. எப்படி ஷோக்கா சட்டை போட்டு வந்துட்டேன் அதுக்குள்ளே. உனக்கு ஒரு வேடிக்கை காட்டட்டுமா? நம்ப வீட்டுக்கு முன்னாலே பார்...”

என்று குழைந்த குரலில் கூறிய ராதை, எதிரே சுட்டிக் காட்டினாள். இளஞ் சூரியனின் கதிரொளியில் அந்த மணல்வீடு அழகாக விளங்கியது. அதைப் பார்க்கப் பார்க்க ஏனோ கண்ணனின் கண்கள் சிவந்து வந்தன. முகம் வேறுபட்டது. அடுத்த விநாடி 'விருட்'டென்று ஓடி அந்த மணல் வீட்டைக் காலால் உதைத்துச் சிதைத்தான் அவன். தன் செயலால் பாவம், அந்தச் சிறுமியின் பிஞ்சு மனமும் சிதைந்து போனதென்பதை கண்ணன் அறியமாட்டான். ராதை துடித்துப் போனாள். அவனது விசித்திர மாற்றத்துக்குக் காரணம் எதுவும் புலப்படாமல் தவித்தது அப்பெண் உள்ளம். வாய்விட்டுப் புலம்புவதைத் தவிர மாற்று ஒன்றும் பிடிகொடுக்கவில்லை ராதைக்கு. ஆனால் அத்தனை எளிதில் அழத்தான் தெம்பு வந்து விடுகிறதா? தெம்பிருந்தாலும் அழத்தான் மனம் இடம் கொடுத்துவிடுகிறதா?

"கண்ணு, எதுக்கு என் வீட்டை அழிச்சியாம்?" என்று கேட்டாள் ராதை தணிந்த தொனியில். பூமனதில் வீசிய புயலின் கொந்தளிப்பு, குரலில் காணோம்.

"பதிலுக்குப் பதில் செஞ்சுட்டேன், பார்த்தியா?"

கண்ணன் இப்படிப் பதில் சொன்னான். அவன் குரலில் ஆத்திரம் எடுப்பாக இருந்தது.

"நீ சொல்றது எனக்கு விளங்கலையே..."

"எப்படி விளங்கும்? நான் கட்டின வீட்டை மாத்திரம் நீ கெடுத்துடலாம். பதிலுக்கு நான் செஞ்சாமாத்திரம் நோகிப் போயிடுமோ"

கண்ணனின் வார்த்தைகள் குழந்தை ராதையை ஆச்சரியத்துக்குள்ளாக்கின. ஏனென்றால் அவன் சொன்னது போல மணல்வீடு கட்டி விளையாடவே கிடையாது. அன்றைக்குச் 'சடுகுடு' விளையாட்டுதான் அங்கம் வகித்தது. வீண் பழியைத் தன் மீது சுமத்துவது கண்டு ராதை பொறுமினாள்.

"நானா உன் வீட்டை அழிச்சேன்? நம்ப மணல்வீடு கட்டி விளையாண்டு ஒரு வாரம் ஆகப் போகுதே. நல்லா யோசிச்சு எதையும் செய்யனும். ஒருவேளை கனா ஏதாச்சும் கண்டு உளறுறியா...?"

'கனா' என்றதும் பளிச்சென்று எதையோ ஒன்றை ஞாபகப்படுத்திக்கொண்டவனாக ஒரு கணம் செயலிழந்தான் கண்ணன். அவன் செய்த தவறை—வீணாக ராதையைக் குற்றம் சாட்டிய பழியை—அப்போது நன்கு உணரலானான்.

இரவு கண்ணன் கண்ட கனவின் விளைவே இருவரிடையிலும் ஏற்பட்ட மனத்தாங்கலுக்குக் காரணம். அவன் நிர்மாணிக்கும் அழகான மணல்வீட்டை ஆசையுடன் காட்டப்போக, அவள் அதைத் 'திடுதிப்'பென்று அழித்து விடுவதாகக் கனவு காண்கிறான். அதற்கு வஞ்சம் தீர்க்கவேண்டுமென்ற ஒரே



'' நீங்க தேர்தலுக்கு ரோட்டிலே நிற்கிறது போதும். ரெண்டு நாழி வீட்டிலேயாவது உக்காருங்களேன்.''

---

எண்ணத்துடன் புரண்ட அவனை ராதை எழுப்பியதும் பழைய ஞாபகம் மட்டுமே அவன் தளிர் நெஞ்சில் முன்னின்றது. கடைசியில் ராதையின் வீட்டைச் சிதைத்து விடுகிறான் கண்ணன்! பூமனத்தின் விந்தையைப் பாருங்கள்!

"ராதை, என்னை மன்னிச்சுப்பிடு. நான் முட்டாள். நீ என் ராதையில்லையா? இதற்கெல்லாம் கோபிக்கப்படாது—ராதை" என்று கெஞ்சினான் அவன். பின் காரணத்தையும் விளக்கினான். ஆனால் அவன் எதிர்பார்த்தபடி அவள் வாய்திறக்கவில்லை. பேசா மடந்தையாக இருந்த அப் பேசும் பொற் சித்திரம்—ராதை தேம்பினாள். கண்ணனுக்குப் 'பக்'கென்றது. அவன் கண்களும் கலங்கின.

"ராதை, நொடிப் போதிலே நீ கட்டின வீடாட்டமாக் கட்டித் தந்துட்டாச்சரிதானே. அப்புறம் அழவும் படாது. அத்தை, அம்மாகிட்டே போய்ப் புகார் சொல்லவும் கூடாது..."

கண்ணன் அவ்வடிவழகியை ஏக்கத்துடன் நோக்கினான். அவன் பார்வையில் என்ன வசியமோ? மின்வெட்டில் ராதை சிரிப்பதைக் கண்டவுடன் கண்ணனுக்கு உயிர் மீண்டும் வந்ததுபோன்ற உணர்வு பரவியது.

" அத்தான், கடைசிமட்டும் நீ என்ன செய்யப் போறேன்னு பார்க்கவே நான் அப்படி அழறது கணக்கா நடிச்சேன். இந்தத் தரம் உனக்கு 'மாப்பு' ஆமா; இனி எம்மேலே கோவிச்சுக்கப்படாதாக்கும். நீ எனக்கு வீடு கட்ட வேணும். நம்ப ரெண்டு பேருமே சேர்ந்து ஒண்ணு நம்பர் பங்களாவாக் கட்டிடலாம்..." என்றாள் ராதை குதூகலம் நிரம்பி வழிய.

இவ்விதம் விளையாடிக் கொண்ருந்த குழந்தைகள் இருவரும், சிரிப்பொலிகேட்டுத் திரும்பினர். ஆனந்தன், அவன் மனைவி, தங்கை மூவரும் நின்றார்கள்.

" ட்ங்கள் 'டு'விற்கு மத்தியஸ்தம் இல்லாமலே ராசியாகி விட்டீர்களாக்கும். அது தான் அழகு. ஊம்; காப்பியைச்

சாப்பிட்டுவிட்டு அப்புறம் விளையாடுங்கள்...” காப்பி ‘செட்’ இரண்டை அவர்கள் முன் சமர்ப்பித்தாள் திருமதி ஆனந்தன்.

★

இரண்டு மணி மெயிலுக்குப் பட்டணம் புறப்பட வேண்டுமென்று தன் அம்மா கூறக் கேட்ட ராதை மிகவும் வேதனைப் பட்டுப்போனாள். பள்ளிக்கூடம் திறக்க இன்னும் நாலைந்து நாட்களே இருந்தன. ஆனாலும் வேறு ஏதோ அவசரகாரியமாக உடனே புறப்பட்டு வரும்படி பார்வதிக்கு அவள் கணவனிடமிருந்து கடிதம் வந்திருந்தது.

கண்ணனின் காதுகளில் செய்தி எட்டியதும் அசந்து விட்டான். ஒரு நிமிஷம் கூட அவளைவிட்டுப் பிரியமாட்டாத அவன் எப்படி அடுத்த லீவு வரை ராதையைப் பிரிந்து—அந்த ஆசைமுகத்தைக் காணாமலிருக்க முடியும்? ராதை தன்னுடனேயே இருந்து படிக்கும்படி வேண்டினான். பார்வதிக்குக் குழந்தையைத் தனியே விட்டு வைக்க மனமில்லை.

“கண்ணா, அடுத்த மாசம் திருவிழாவிற்கு ராதையை உன்னிடம் கொண்டு சேர்த்து விடுகிறேன். கடல்கடந்தா போகிறோம்? எண்ணிச் சில நாள் பொறுத்திரு” என்று பார்வதி சொன்னது, கண்ணனுக்கு என்னவோ அமைதியூட்டவில்லை.

ராதை ஊருக்குப் புறப்பட்ட போது அவள் கண்களில் நீர் மின்னிய காட்சி மட்டும் அடிக்கடி கண்ணனின் மனத்திரையில் நிழல் வடிவிட்டது.

★

நாட்கள் கழிந்தன.

ராதை ஊருக்குச் சென்றதிலிருந்து கண்ணனுக்கு எதிலுமே மனம் செல்லவில்லை. விளையாட்டு, கோலி ஆட்டம் என்றால் பிராணனை விடும் அதே கண்ணன் அன்று விளையாடும் இடத்தைக் கூட எறிட்டுப் பார்க்கவில்லை. பித்துப் பிடித்தவன் போலச் சதா காணப்பட்டான். ஒருநாள் ராதையின் மணல் வீட்டை அழித்து விட்டானல்லவா? அந்தத் துன்ப வடு அவன் குருத்து மனதைக் குடைந்தது.

கண்ணனுடைய இந்த மாறுதலைக்கண்ட அவன் பெற்றோர்கள் திகைப்படைந்தனர்.

“கண்ணா, உடம்புக்கு ஏதாவது பண்ணுதா? டாக்டரைக் கூட்டிவரட்டுமா? ஏன் இப்படி என்னவோ போல ஒரு மாதிரி இருக்கே...” என்பதாகத் தாயும் தந்தையும் மாறிமாறி வினவினார்கள்.

பெற்றோர்கள் நச்சரிப்புக்குப் பயந்தோ என்னவோ அன்று உண்மையை வெளியிட்டான் குழந்தை.

“அம்மா, அப்பாவிடம் சொல்லி என்னை நம்ப ராதை



"ஏண்டி வெறுமனே அடிச்சுக் கரே? தேர்தல் முடியட்டும். நன்னு எதேஷ்டமா தினம் நூறு தேங்காய் விதம் கொண்டுவாரேன்."

கிட்டே அழைச்சுட்டுப் போகச் சொல்ல மாட்டியா?" என்று அழாக் குறையாக் கூறினன்.

ராதையின் பிரிவுதான் கண்ணனின் சஞ்சலத்திற்கும், மாற்றத்துக்கும் காரணம் என்பதை அறிந்த தாய் ஆச்சரியப் பட்டாள்; அமைதியடைந்தாள்.

"ஆகட்டும் கண்ணே; முன்னலே இதைச் சொல்லியிருக்கப்படாதா? நாங்கள் பயந்துவிட்டோமே...... நல்லவேளை...எங்கள் வயிற்றில் பாலை வார்த்தாய்"

அன்று மாலை ரயிலுக்குப் புறப்பட ஆனந்தனும் கண்ணனும் ஆயத்தமாகினர்.

அதே சமயம் வாசலில் ஜட்கா ஒன்று வந்து நின்றது. அதிலிருந்து குதித்து வந்த ராதையைப் பார்த்த கண்ணனுக்குத் தன் விழிகளையே நம்ப இயலவில்லை.

"ராதை" என்றான் கண்ணன்.

"அத்தான்" என்றாள் ராதை.

இடைவேளை கழிந்து சந்திக்கும் காதலர்கள்போலக் குழந்தைகள் இருவரும் களிப்புற்றார்கள்; சிரித்து மகிழ்ந்தார்கள்.

ராதையின் தந்தை கோபுவை வரவேற்ற ஆனந்தன், "கோபு, நான் கண்ணனை அழைத்துக் கொண்டு சென்னைக்குப் புறப்படத் தயாராக இருந்தேன். ராதையைப் பார்த்தால்தான் உண்டு என்று துடித்து விட்டான். நல்லவேளை நீங்களே ராதையைக் கூட்டி வந்துவிட்டீர்கள்" என்றான்.

"ஆனந்தன், குழந்தை உள்ளம் அதி விசித்திரமாகவிருக்கிறதே. ராதை என்னிடம் அத்தானைப் பார்க்க வேண்டுமென்று பாடாய்ப்படுத்தி விட்டாள். அவள் பேச்சுக்கு எவ்வளவு தான் டிமிக்கி கொடுக்க முடியும்? அழைத்து வந்து விட்டேன். கண்ணனுடன் சேர்ந்தே படிப்பதாகவும் கூறி விட்டாள்"

"ரொம்பசந்தோஷம். பருத்தி புடவையாக் காய்த்த மாதிரி. இனி எங்கள் கண்ணன் பாடும் யோகந்தான்"

'இனி நாம் இருவரும் என்றென்றுமே இணைபிரியாதிருக்கலாம்' என்பது போல ஒருவரை ஒருவர் பார்த்துப் புன்னகை செய்து கொண்டார்கள் கண்ணனும் ராதையும்!

# நமக்குள்ளே

சுகி

10

அவர்களைத் தவிர்க்கவும் இந்த டயரிகை கொடுக்கும். இனும் டயரி கிடைத்தால் தான் சிலருக்குப் புது ஆண்டு பிறந்த

இந்த மாதத்தில் எங்கே பார்த்தாலும் டயரிகள் கண்ணில் வந்து குத்தும். டயரி எழுதுதல் நல்ல பழக்கம் என்பவர்கள், கெட்ட பழக்கம் என்பவர்கள் இருசாராரும் உண்டு டயரி எப்படியோ வந்து குடியேறிவிட்டது; இனி 'போ' என்ருலும் ஆங்கிலேயனைப் போல் போகக் கூடிய காரியமில்லை. பழைய டயரியிலிருந்து நண்பர்கள் முகவரியைப் பெயர்த்து எழுத வேண்டும்; கடன் தொகை கொடுக்க வேண்டியது, வாங்க வேண்டியது எல்லாவற்றையும் இதில் குறிப்பதோடு, ஒரு வாரத்திற்கு மூக்கியமாக மறக்காமல் செய்வோம். அப்பால்? அப்பாலுக்கு அப்பால் போய் விடும். டயரியை மறப்பது நமக்கு என்ன புதிய காரியமா? அவை அனுதைக் குழந்தைபோல் நம் மேசையில் கிடக்கும். யாராவது தூக்கிக்கொண்டு போனுலும் தெரியாது. சிலர், வீட்டுக்கு ஒரு டயரி, அலுவலகத்துக்கு ஒரு டயரி என வைத்திருப்பார்கள். விடிந்ததும் அதைப் புரட்டிப் பார்க்காமல் எதுவுமே செய்ய முடியாது. சந்திக்க நினைப்பவர்களைச் சந்திக்கவும், மாதிரி. இல்லாவிட்டால், சென்ற ஆண்டிலேயே குடியிருப்பார்கள்.

* * *

தினக் குறிப்பில்கூடச் சிலர் உண்மையைக் குறிக்கமாட்டார்கள்.

* * *

நானுக இதுவரை டயரி வாங்குவதில்லை; கொடுத்தால் அதை மறுப்பதும் கிடையாது. எனக்கு அன்பளிப்புக் கொடுத்த நண்பர், தமது கடை பற்றி ஒரு ருசியான விபரம் சொன்னுர்: பணக்கார வியாபாரி ஒருவர் தமது பையன்களில் ஒருவன் ஊதாரியாக இருப்பதைக் கண்டு, தனியாக ஒரு கடை வைத்துக் கொடுத்தார். அந்தப் பையன் வியாபாரம் செய்யச் சோம்பல்பட்டுக் கடையைத் திறக்கவேயில்லை— இது 1945–ம் வருஷத்தில் நடைபெற்ற சம்பவம். திடீரென்று அயல்நாட்டுச் சாமான்களுக்கு கிராக்கி. இதனுல் அடைத்த கடையை 20 ஆயிரம் ரூபாய் சரக்குள்ளதை ஒரு லட்சத்திற்குக் கேட்டார்கள். ஊதாரி விழித்துக்கொண்டான். ஐந்து மடங்கு லாபம். விற்ருன். வேறு தொழில் செய்ய ஆவல் பிறந்தது. இந்த நெருக்கடியான சமயத்

தில் அவன் தகப்பனுரும், சகோதரர்களும் செய்துவந்த வியாபாரம் நொடித்து ஆண்டியானுர்கள்; ஊதாரிப்பிள்ளையை அண்டிவரவேண்டிய வேளை வந்தது. ஊதாரி தனது குடும்பத்தைக் காப்பாற்றினுை இல்லையா? அது தெரியாது. வாழ்க்கையில் எதிர்பார்ப்பன மடிந்து போவதும், எதிர்பாராதவைகளைப் போல, மடியாமலும் வளர்ந்து விடுகின்றன; வாழ்வின் புதிர் நமக்குப் புரியாமல் போய்விடுகிறது.

வாழ்வின் புதிர் இருக்கட்டும். பொருளாதாரம் உங்களுக்குப் புரியுமா? எனக்குத் தலைவலி தரும் பொருள்களில் அதுவும் ஒன்று. நேற்று, எழுதுவதற்கு வைத்திருந்த என் பேனுவை என் பையன் ஒடித்துவிட்டான். பேனு போய்விட்டதே என்று நொந்துகொள்கிறேன். ஏனெனில் இன்னெரு பேனு வாங்கப் பணம் வேண்டும். அதாவது, இன்னெரு செலவுக்கு நான் மீத்துள்ள பணத்தைக் கொண்டு பேனுவை வாங்க வேண்டும். இதனுல், பொருளாதார உலகத்திற்கு ஒன்றும் நஷ்டமில்லை. துணி வாங்க வேண்டுவதற்குப் பதிலாக நான் பேனு வாங்க வேண்டும். பேனுக்கள் ஒடிவது, தொலைவது பேனு உற்பத்திக்காரர்களுக்குப் பிழைப்புத் தரும். மறைமுகமாகப் பார்த்தால் பேனுக் கம்பெனிக்கு என் பையன் நன்மை செய்திருக்கிறுன். நஷ்டத்தில் லாபம் என்று கூடச் சொல்லலாம். பேனு அல்லது துணி என்ற இரண்டில் எது அவசியமோ அதை நான் தேடுகிறேன். பேனு அவசியத்தேவை. அதனுல் கையில் இருக்கும் பத்து ரூபாயும் போய்விடுகிறது. பேனுக் கடைக்காரருக்கு என்னுல் எதிர்பாராத லாபம் அதே சமயம் என்னை எதிர்பார்த்து இருக்கும் ஜவுளிக் கடைக்காரருக்குப் பத்து ரூபாய் நஷ்டந்தானே? என்னுல் லாபம் அடையப்போகும் பேனுக்காரரைத்தான் உலகம் புரிந்துகொள்ளுமே தவிர, ஜவுளிக் கடையைப் புரிந்துகொள்ளாது; கண்ணுக்கு அப்பாற்பட்டதைப் பார்க்கும் சக்தி எல்லோருக்கும் இருப்பதில்லை. இதனுல்தான் ஒருவனுடைய செலவைக் கேட்கும் போது நாம் திகைக்கிறேம். நம்முடைய தேவையோடு அடுத்தவர்கள் செலவை ஒப்பிட்டுப் பார்க்காமல் வரவோடு ஒப்பிட்டுப் பார்ப்பது தவறு.

நாம் எல்லோரும் செலவு செய்கிறேம். வயிற்றில் ஈரத் துணியை முறுக்கிப் போட்டுக் கொண்டு இருப்பவர்கள் ஒரு சிலர்; இவ்வாறு செலவு செய்வதின் நோக்கம் தேவையைப் பூர்த்தி செய்தலே அவசியத் தேவை, கௌரவத் தேவை என இருவகையாக நம்முடைய தேவையைப் பிரிக்கலாம். நான் உடை உடுத்திக்கொள்ளுவது அவசியத் தேவை; ஜரிகையில் உடுத்திக் கொள்ளுவது கௌரவத் தேவை; மலிவுப் பதிப்புப் புத்தகம் எனக்குத்

தேவை; உயர்ந்த கட்டிடப் பதிப்புப் புத்தகம் கௌரவத் தேவை; சினிமாப் பார்ப்பது தேவை; ஏழைகை அணுவோடு போகிற சனியனை ஒரு ரூபாய் ஒன்பதணு கொடுத்துப்பார்ப்பது கௌரவத் தேவை. அரிசி சாப்பிடுவதும் அல்வா சாப்பிடுவதும் ஒன்றல்ல; முன்னது இல்லாமல் தீராது; பின்னது இல்லாமல் உயிர் வாழமுடியும். மூன்றுவது வகுப்பு இல்லாமல் தீராது; முதல் வகுப்பு நாட்டின் சௌரவத் தேவை. பேனுவை ஒடித்தல் தொழில் உற்பத்திக்குச் சேவை செய்தலே; அது கௌரவத் தேவையாக ஒரு சிலருக்கு இருக்கிறது; எனக்கோ அது அவசியத் தேவையாக இருக்கிறது. சிலருடைய ஜேபியில் பளபளக்கும் விலையுர்ந்த பேனுக்கள் இருப்பதைப் பார்க்கும்போது எனக்குப் பொருமை வரும்; எழுதுகிறவனுக்கு இல்லாத பேனு இந்தத் தற்குறிப் பேர்வழிக்கு எதற்கு? இவர்கள் அந்தப் பேனுவில் எழுதிக்கொண்டே இருக்கப் போகிருர்களா? அல்லவே. அந்த நபர்கள் 'ஒரு பேனு வாங்கச் சக்தியற்றவனுக்கு இந்த உயர்ந்த பேனு எதற்கு?' என நினைத்து விட்டால், அதுவும் நியாயம்; நீதி. வாங்கும் சக்தியில்லாத நாட்டு மக்களைக் கண்டு தேசங்கள் சிரிக்கிறதைப்போல, சம்பாதிக்க இயலாத மனிதனைக் கண்டு தனி மனிதன் சிரிக்கிருன். பொருளாதாரத் தத்துவப்படி பார்த்தால், ் தவைக்கு அதிகமாக எதையும் ஆக்ககூடாது,



'பேன்' காற்றுக்காக ஓட்டல் மாற்றுபவர்கள்

கரன்சி நோட்டு உட்பட. அப்படி நடக்க முடிவதில்லை.

நான் எழுதும் தாள்களை விட அருமை அருமையான தாள்கள் சிகரெட்டில் பொதியப்படுகின்றன. சிகரெட்டில் பொதிவதற்காக அத்தனை வெண்மையான பேப்பர் அவசியமா? இல்லை தான். நான் உபயோகிக்கும் சோப்புக்குத்தான் காசு கொடுக்கிறேன்.

அவர்களோ நான் உபயோகிக்கும் சோப்புக்குக் கொடுத்த காசை சிக்கனம் செய்து அதைச் சுற்றி வர்ணப் பேப்பர்கள், டப்பாக்கள் கொடுக்கிருர்கள்; நாளாவட்டத்தில் என் சோப்புக்கு உப பொருள்கள் பல வருகின்றன. ஓட்டலில் சாப்பாட்டுக்குத் தானே காசு. ஆனல் நமக்குத் தேவைப்படாத வாசனை, நம் உடம்புக்கு ஒத்துக்கொள்ளாத உபகரணங்கள், இப்படிப் பழக்கம் செய்கிருர்கள். முடிவில் உண



கந்தல் மத்தியில் சினிமா விளம்பரங்கள்...

வில் குறைவு ஏற்பட்டு நாம் வாசனைப் பொருள்களை உண்ண வேண்டிய பழக்கத்திற்குக் கொண்டு வந்துவிடுகிறார்கள். காப்பி சாப்பிடுவது முக்கியமல்ல என்பது பொய்; 'பேன்' காற்றுக்காக ஓட்டல் மாற்றுபவர்கள் நம்மில் எத்தனையோபேர். சோப்புக் கம்பெனிகள் விளம்பரத்திற்குச்செய்யும் செலவைக்கொண்டு உயர்ந்த ரகப் பத்திரிகைகள் போடலாம். உயர்ந்த ரகப் பத்திரிகைக்குப் பேப்பர் கிடைக்காமல் சோப்புக் கம்பெனியார் செய்தும் விடுவார்கள்; காரணம் அவர்களிடம் சோப்புத் தொழிலுக்குப் போக விளம்பரம் செய்வதற்கும் பணம் இருக்கிறது. பொது மக்களிடமிருந்து சோப்புக்கு மட்டும் பணம் நிறையப் பெற்ற காரணத்தால் பொது மக்களுக்கு நல்ல பத்திரிகை கிடைககவொட்டாமல் செய்து விடுகிறது சோப்புக் கம்பெனி. இப்படித்தான் சர்க்காருக்கு வரியாகக் கொடுக்க விரும்பாமல், நமக்குத்தேவையற்ற முறையில் பல முதலாளிகள் பணத்தையும் காலத்தையும் செலவு செய்கிறார்கள். இப்படிப் பணத்தை விளம்பரத்துக்குச் செலவு செய்யப் போக, இன்னும் அதிகப் பணம் வந்து குவிகிறது. மேலும் மேலும் நமக்கு அவசியப் பொருள்கள் அருகிப் போய் அவசியமற்ற கௌவரப் பொருள்கள் குவிந்துவிடுகின்றன. முன்னாளில் நம் முன்னோர்கள் ஒரு பொருளில் செல்வத்தைப் போட்டால், அதை மாற்றக் கூடிய முறையில் போடுவார்கள்; தங்கம், வெள்ளி இம்மாதிரி. நாமோ மரச் சாமான்களில் நாகரிகம் என்ற பெயரினால் போட்ட பொருள்கள் எல்லாம் மீண்டும் எடுக்க முடியாதபடி இருக்கின்றன.

எங்கோ ஆரம்பித்து எங்கோ வந்துவிட்டேன். ஆதியில் பண்டமாற்று முறை; உப்புக்குப் பதில் பருப்பு என்று இருந்தது. பொருள்களை இடம்விட்டு இடம் தூக்கிக்கொண்டு போகும் சிரமத்தைக் குறைக்கப் பணம் என்ற பொருளைக் கண்டு பிடித்ததும் போதும், நாம் படுகிற அவதியும் போதும். ஒரு தொழில் மூலம் பணம் கிடைத்ததும் அந்தத் தொழிலை நடத்துகிறவன் அவன் தொழிலுக்குச் சம்பந்தப்படாத, தேவையில்லாத, பிற தொழில்களுக்குத் தேவையுள்ள முக்கிய பொருள்களைப் பணத்திமிரினால் வாங்கி விடுகிறான். சிறு முதலாளிகள்

அழிந்து தொழில் நசித்துப் போகின்றன. முந்திரிப் பருப்பு நல்ல ருசியுள்ள உணவுப் பொருள் என்பது நமக்குத் தெரியும். இதை வாங்கும் சக்தி நமக்குக் குறைவாக இருக்கும் போது, நம்முடைய சக்திக்கு அதிகமாக விலைகூறிப் பெப்பர் மெண்டுக்குள் வைத்து நமக்கே கொண்டுவந்து விற்கப் பெரிய முதலாளி போட்டியிடுகிறார்! வெற்றி அவருக்குத்தான். உங்கள் புத்தகத்தைப் பைண்டு செய்யத் தேவையான அட்டை கிடைப்பதில்லை. அதே அட்டையைக் கிலிட்டுக் கொடுத்துப் போலிநெக்லஸ் விற்கும் கடைக்காரர் வாங்கிபெட்டிகளாகமாற்றி விடுகிறார்! நம்முடைய புத்தகத்திற்கு அட்டை கிடைக்காமல் கசங்கிக் கிடக்கும் நிலையில், நம் வீட்டில் போலி நெக்லஸ் அட்டைப்பெட்டியுடன் காட்சி தருகிறது. இப்படியே ஒரு தொழில் மூலம் கிடைக்கின்ற செலவுப் பெருக்கால், மற்ற தொழில்களுக்குக் கிடைக்க வேண்டிய பொருளைக் கிடைக்கவொட்டாமல் தெரிந்தும் தெரியாமலும் செய்வதுதான் முதலாளித்துவம் என்று நினைக்கிறேன். துணிப்பஞ்சம், துணிப்பஞ்சம் என்று மோட்டா ரகத் துணி கிடைக்காத இந்நாளில், பத்தடி தூரத்தில் பத்துக்குப் பத்து உயரத்தில் சினிமா விளம்பரங்கள் எத்தனை எத்தனை, ஆயிரம் பார்க்கிறோம். கந்தல் உடுத்துகிறவன், சினிமாக் காட்சிகள் பார்க்கப் போகிறான்; தன்



[கொதிக்கும் காப்பியை எட்டு முழ வேட்டியால் ....

முதலாளித்துவ எக்களிப்பால், அவனுக்கு மலிவுத் துணி கிடைக்கவொட்டாமல் செய்ய முடிகிறது. இப்படி எத்தனை தொழில்களின் வளர்ச்சி தனி மனிதனைப் பாதிக்கிறது.

“கிருஸ்துமஸ் வருகிறது, போனஸ் கிடைக்கும்” என்று எனது தொழிளாள நண்பர் சொன்னார்; உண்மை. “முதலாளிகள் சர்க்காருக்குப் போய்ச் சேரக்கூடாது என்ற நோக்கத்திற்காகப் போனஸ் கொடுத்தாலும் சரி, இல்லை கருணையினால் நடந்தாலும் சரி. இது தனிப்பட்டவர்களுக்குத்தான் நன்மையே தவிர, எல்லோருக்கும் என்ன நன்மை?” என்று கேட்டேன். பொருளாதார நிபுணர் “உண்மை. சர்க்காருக்கு வரியாகக் கொடுத்தால் பொது மக்கள் எல்லோருக்கும் பயனாக இருக்கக்கூடிய வேலைகள் நடக்கும். பொது ரஸ்தா, பாலம்,



**"நான் தேர்தலுக்கு நிற்கிறேன். உங்க கிட்டேயும் ஒரு வார்த்தை சொல்லிட்டுப் போகலாம்னு வந்தேன்."**

---

தண்ணீர் வசதி இப்படி. தனிப்பட்டவர்களுக்குக் கொடுக்கும் போனஸ் தனிப்பட்டவர்கள் செல்வநிலையைப் பெருக்கும். நல்ல கார்கள் வாங்கி வைத்திருப்பவர்கள், போனஸ் பெற்ற காரணத்தால் அதே பணத்திற்கு நல்ல கார்களும் வாங்கலாம். நல்ல ரோடுகளும் போடலாம், வருமான வரியை நியாயமாகக் கொடுத்தால்" என்று சொன்னார். எனக்குச் சுமாராக விளங்கிற்று. பொருளாதாரம் இருக்கிறதே அது தனிமனிதனுக்கும் தலைவலி தருவது; சர்க்காருக்கும் தலைவலி தருவது; இருப்பவர்களுக்கும், பிறக்கப் போகிறவர்களுங்கும் தலைவலி தருவது என்ற முடிவுக்குத்தான் வர நேரிடுகிறது.

* * *

**மனிதனுடைய தேவையை வைத்துப் பணம் சம்பாதிப்பதைவிடப் பல கீனத்தை வைத்துத்தான் உலகில் நிறையச் சம்பாதிக்க முடியும். தேவையில்லாததைத் தேவை போல உண்டாக்கிக் காட்டுவதுதான் விளம்பரம்.**

* * *

சீனாவில் முதன்முதலில் விளக்கையும் (அரிக்கேன் விளக்கு) டைம்பீஸையும் ஒவ்வொரு வீட்டுக்கும் கொடுத்தார்கள். ஒவ்வொரு வீட்டாரும் தங்களுக்கு இந்த இரண்டும் வேண்டாமென்றார்கள். பல வந்தப்படுத்திக் கொடுத்தார்கள். இந்த இரண்டின் தேவையையும் தேவையாக உணராமல் வேடிக்கைப் பொருளாகக் கையாண்டார்கள். மூன்றாம் மாதம் மீண்டும் எடுத்துக்கொண்டார்கள்; ஒவ்வொரு வீட்டிலும் விளக்கு, கடிகாரம் இல்லாமல் அவதிப்பட்டார்கள். வேண்டாம் என்றவர்களே வேண்டும் என்று விலைகொடுத்து வாங்க ஆரம்பித்தார்களாம். திருவிழாக் காலங்களில் சுருட்டு, பீடி, புகையிலைக்கட்டுக்களை வாரிவாரி வீசியெறிந்து பழக்கத்திற்கு அடிமையாக்குகிறார்கள்; பழகிய பின் வாடிக்கைக்காரர்கள் ஆவார்கள். ஓசிப்பொடி கொடுக்க வருபவர், ஓசி சிகரெட்டுக் கொடுக்கவருபவர், ஓசியில் உதவுபவர்கள் உங்களை நிரந்தர வழியில் பழக்க வருகிறார்கள் என்பதைத் தெரிந்திருப்பீர்கள்; தெரிந்தும் அவ்வழியில் இறங்குவது நம்முடைய கெட்டிக்காரத்தனத்தைக் காட்டுகிறது. **'சாம்பிள்'** கொடுத்துத்தான் சாம்ப

ராக்கவேண்டும் என்பது வியாபாரத் தந்திரம்.

* * *

**முதல் வாரம் விருந்தாளி; மறு வாரம் தங்கினுல் படுக்காளி—பழமொழி.**

* * *

வீட்டுக்கு விருந்தாளியாக வருபவர்களை எப்படி நினைக்கிருர்கள் என்பதை ஔவையார் ஒரு பாட்டில் வினயமாகச் சொல்லியிருக்கிருர். விருந்தாளிகளைக் கண்டு ஓடுவது தன் பொருளுக்கு ஆபத்து வந்துவிட்டதே என்ற பயத்தினுல் மட்டுமா? அல்ல என்பது என் எண்ணம். எங்கள் வீட்டுக்கு வந்த ஒருவர் காப்பி குடித்தார். அதாவது கன்னங்கரிய நிறத்தில்; கசப்பு என்ருல் அதற்கு உவமை கூறமுடியாது. கரித் தண்ணீர்க் காபி; ஆனுல் அவர் சர்பத்துக்கு எலுமிச்சம்பழத்திலே போடுகிற தித்திப்பு சொல்லி முடியாது. ஒரு பழத்திற்கு ஒரு வீசை கரைத்தார். இட்லிக்குக் காரம் தள்ளுபடி; வெல்லம் வேண்டுமென்று கேட்டார்; ஓட்டல் பட்சணம் என்ருல் தித்திப்புத் தள்ளுபடி; குளிப்பது மண்பானைத் தண்ணீர்; குடிப்பதோ ஆவி வரும் உலைப்பானை வெந்நீர். அரிசி போட்டால் சாதம் ஆகிவிடும். அப்படி ஆவிபிடிக்கக் குடித்தார். எட்டுமுழ வேட்டியை மடித்து டம்ளரில் சேர்த்துப் பிடித்துக் குடிப்பார். இவ்வளவு பழக்கங்கள் உள்ள ஒருவர் விருந்தாளியாக இருந்தால் எந்த வள்ளலும் கோபம் கொள்ளத்தான் செய்வார்கள். நம்மில் பலரும் சூட்டில், ஒருவகையான ருசியைக் காண்கிருேம்; சூடு சூடாக இருப்பதில் தனிப்பட்ட ருசி அடைக்கப் பட்டிருப்பதாக நினைக்கிருேம். சூடு ஒரு ருசி; கருப்பு ஒரு அழகு. என்ற பழமொழியும் பிறந்தது. நிதானத்தைத் தானத்திலும் சிறந்தது என்பார்கள். உணவு விஷயத்திலும் இதையே கொள்க. சுமாரான சூடு சுகாதார முறைப்படியும் ருசி என்ற வகைக்குள்ளும் வரக்கூடியவை. இதைவிட்டு ரெயில் இஞ்சின் ஓட்ட நீராவிக்குத் தேவைப்படுகிற உஷ்ணம்போலச் சாப்பிட்டால் அங்கே ருசி இல்லை. 'இளஞ்சூடு' என்ற சொல்லப்படுகிற சூட்டுக்குத் தனி ருசி. ஆறின பதார்த்தங்களுக்குத் தான் பெரும்பாலும் ருசி அதிகம். சூட்டை உண்கிருேமே தவிரப் பதார்த்தத்தின் ருசியை இழந்துவிடக் கூடாதல்லவா? மனிதனுக்கும் மிருகத்திற்கும் உணவு உண்பதில் உள்ள வேற்றுமை, நாம் பசி நீக்கம் என்பதோடு சிறிது கலையையும் ஈடுபடுத்துகிருேம். பசியை மட்டும் போக்க வேண்டுமானுல், ஆகாரத்தை விழுந்து கடித்துக் கொண்டிருப்போம். ஆகாரம், தீனி, இரை என்ற பதங்கள் ஏற்பட்டிருக்கா. அவசியத்தை அழகு படுத்திக் கொள்ளுவதுதான் மனித நாகரீகம். நாய் தண்ணீர் குடிக்கும்



போது பார்த்தால் அந்த ஓசையே அருவருப்பாக இருக்கும்; பூனை தன் இரையை அடித்துத் தின்னும்போது பார்த்தால் கோரமாகவிருக்கும். இவ்வாறு நாம் சாப்பிடும்போதும் இருந்தால் நாம் இன்னும் விலங்குகள் கூட்டத்தில் இருக்கிறோம். இன்றும் பந்திகளில் முழங்கை வரை ஒழுகவிட்டுக்கொண்டு சாப்பிடுபவர்கள் சாப்பிட்ட இலையைப் பார்த்தால் நாய் குதறிய பெருச்சாளி மாதிரி இருக்கும்; இலைகளைப் பார்க்கும்போது மனிதனைக் காட்டுமிராண்டிகளாக எண்ணுகிறோம். உணவை வீணாக்காமலும் உண்பதை அருவருப்பின்றியும் உண்பவரே நமது மதிப்புக்கு உடையவர். உள்ளப்பண்பு நிறைந்திருந்தாலும் அடுத்த இலையில் அருவருப்பு அடையும்படி உண்பவர்களைக் கண்டால் எனக்குக் கசாப்புக் கடைக்குள் உட்கார்ந்து சாப்பிடுவதுபோல இருக்கும்.

கதை ஒன்று கேட்டிருப்பீர்கள். பந்தியில் இருந்த பையன் அழுதான். எல்லோரும் வந்து விசாரித்தார்கள். அவனுக்கு என்னென்ன வேண்டுமென்று விசாரித்தார்கள். பையன் ஒன்றும் தேவையில்லை என்றான். முடிவில், அழுகையோடு அழுகையாக "எங்கப்பா மாம்பழம் சாப்பிட எடுத்துப் பிதுக்கினார்கள்; அது ஐந்தாம் பந்தியைத் தாண்டிக்கொண்டு ஓடிப்போனது; நான் பிதுக்கினேன்; இரண்டாம் பந்தியில் தான் போய் விழுந்தது" என்றானாம். எப்படி இருக்கிறது? சிறு பையன் மட்டுமன்று; பெரியவர்களே இப்படிச்செய்வதை நாம் பார்க்கிறோம். இம்மாதிரிப் பந்தியிலும், விருந்திலும் வந்து சேர்ந்து விட்டால் என்னதான் விருந்தோம்பும் தன்மையிருந்தாலும் அவை இருந்த இடம் தெரியாமல் போய்விடும். மனிதப் பண்புக்கு அப்பால் விருந்தில் மட்டுமல்ல, எதில் நடந்து கொண்டாலும் அது தவறுதானே!

# ரங்கோன் ராஜா



(தங்கமணி)

“அம்மா!” என்றான் ராஜா.

“என்னடா?” என்றாள் அவன் அம்மா.

“ஒரு அணா வேணும்...”

“ஒரு அணாவா! ஏண்டா உனக்கு வேறே வேலையில்லை? போடா இங்கிருந்து” என்று கூறிக்கொண்டு கையிலிருந்த கரண்டியை ஓங்கியபடியே சீறி விழுந்தாள் அவன் அன்னை. ஈர விறகின் புகைச்சலின் புல்லரிப்பு ஒரு பக்கம்; காசு இல்லாத கவலை ஒரு பக்கம்; நெஞ்சிலே மண்டிக்கிடக்கும் துக்கத்தின் கடுமை ஒரு பக்கம்! பாவம்; அவள் எதை நினைத்துக்கொண்டாளோ? மௌனமாய்த் தலையைக் கவிழ்த்துக்கொண்டு நெஞ்சிற்குள்ளேயே தேம்ப ஆரம்பித்தாள். ராஜா தன் தாயையே பார்த்துக் கொண்டு ஆடாமல் அசையாமல் நின்றான். அவனுக்கும் அழுகை வெடித்துப் புறப்பட்டது. ஆனால்......!

* * *

சுமார், எட்டு ஆண்டுகளுக்கு முன்னே......

ராஜா, அவனுடைய அம்மா, அப்பா எல்லாம் ரங்கோனில் நல்ல செல்வாக்குடன்தான் வாழ்ந்து வந்தார்கள். அந்தப் பாழாய்ப்போன ஜப்பான்காரனின் குண்டு மழையிலே அல்லல்பட்டு அவதிப்பட்டு, அருமையாயுள்ள அப்பாவையும், சொத்து, சுதந்திரங்களையும் பறிகொடுத்து, எப்படியோ உயிர் தப்பித்து, ராஜாவும் அவன் அம்மாவும் சென்னைக்கு வந்து சேர்ந்தார்கள்.

ஏழெட்டு நாட்களாக ராஜாவும், அவன் அன்னையும் அணிந்திருந்த ஓரிரண்டு நகைகளை விற்று எப்படியோ காலத்தைத் தள்ளி விட்டார்கள். அப்புறம், நகை விற்ற பணம் தீர்ந்து போன பிறகு, பசி தாளாமல் மிகவும் வேதனையடைந்தனர்.

கடைசியில்—அதாவது ராஜாவும், அவன் அம்மாவும் பிச்சையெடுக்கத் துணியும் நேரத்தில் அம்மாவுக்கு ஒரு வீட்டில் வேலை கிடைத்தது அவளும் சமையல்காரி வேலையை மகிழ்வுடன் ஏற்றுக் கொண்டாள். கடந்த எட்டு வருட காலமாக [illegible] உழைத்துக்

கஷ்டப்பட்டுத் தன் ஒரே மகன்—செல்வ மகன் ராஜாவுக்காகத் தானே அவன் தாய் உயிர் வாழ்ந்து வந்தாள்—வருகிறாள்!

*  *  *

ரங்கோனில் வாழ்ந்த ராஜா வாழ்வையும், தன்னைச் செல்லமாய் வளர்த்த அருமை அப்பாவையும் நினைத்து வெகு நேரம் வரை கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தான் ராஜா.

அவன் நெட்டுயிர்த்துக்கொண்டு எழுந்து நடந்தான். கொஞ்ச நேரத்திற்குள் மிட்டாய்க் கடை வீதி வழியாகப் பராக்கு பார்த்துக் கொண்டே வந்தான். ஒரு மிட்டாய்க் கடையின் எதிரில் வந்ததும் 'டக்'கென்று நின்றான். மிட்டாய்க்கடை மெர்க்குரி விளக்கின் வெண்ணிற வெளிச்சத்தில், அடுக்கடுக்காய் வைத்திருக்கும் ஜாங்கிரி, லட்டு, ஜிலேப்பிகளையும் அசையாமல் வெறிக்க வெறிக்கப் பார்த்தான். அவன் பிஞ்சு உள்ளத்தில் ஆசை சுரந்தது போலவே, அவன் நாக்கிலும் உமிழ்நீர் சுரந்தது!

"ஆகா! இதெல்லாம் சாப்பிட்டு எவ்வளவு நாளாகிறது! நம் அப்பா மட்டும் இருந்தால்?...... அவர்தான் இல்லையே!"

ஒரு கணம் யோசித்தான். ஏதோ துணிகரமான முடிவுக்கு வந்தான். கடையண்டை போனான், கையைச் சட்டைப் பையில் போட்டுத் துழாவிக்கொண்டே "என்னுங்க, ரெண்டு ஜாங்கிரியும் ஒரு பொட்டலம் பூந்தியும் ஒரே பொட்டலமாக் கட்டிக் கொடுங்க" என்று 'டிப் டாப்'பாகக் கேட்டான் ராஜா.



கடைக்காரன் இரண்டு ஜாங்கிரிகளையும் ஒரு பூந்திப் பொட்டலத்தையும் ஒரே பொட்டலமாகக் கட்டி ராஜா விடம் கொடுத்துவிட்டு, "உம்...ம்...துட்டை எடு" என்றான்.

மிட்டாய்ப் பொட்டலத்தை வாங்கும்போது ராஜாவின் கை ஏனோ நடுங்கியது. அவன் கை நடுங்கியது போலவே அவன் உள்ளமும் நடுங்கியது!

ஏன்? என்ன காரணம்?

ராஜா மிட்டாய்ப் பொட்டலத்தை வாங்கிக்கொண்டான். பையில் கையைப் போட்டுத் துழாவிக் கொண்டே ஓரக்கண்ணுல் சுற்றுமுற்றும் பார்த்தான். அவ்வளவு தான்! மறு விநாடி—ஜிவுக் கென்று அங்கிருந்து எடுத்தான் ஓட்டம்! பஞ்சாய்ப் பறந்தான்! சிட்டாய்ப் பறந்தான்!

அந்த மிட்டாய்க் கடைக்காரனுல் ஏவிவிடப்பட்ட பகாசூரன் போலிருந்த ஒரு வேலைக்காரனிடம் ராஜா அகப்பட்டுக்கொண்டான்.

"ஏண்டா, டேய்!...கத்திரிக்காய்ப் பயலே ஓட்டமா ஓடுறே... ஓட்டம்! அதெல்லாம் இவருகிட்டே நடக்காது தம்பீ!..." என்று உறுமிக்கொண்டே ராஜாவின் கழுத்தைப் பிடித்து இழுக்க ஆரம் பித்தான் அந்த மிட்டாய்க் கடைப் பகாசூரன்!

"ஐயா, தயவு செய்து மன்னிச்சுடுங்க ஐயா. இந்தாங்க உங்க மிட்டாய்ப் பொட்டலம். என்னை விட்டுடுங்க ஐயா, இனிமேல் அப்படிச் செய்யமாட்டேனுங்க ஐயா" என்று ராஜா கெஞ்சிக் கதறினுன்.

அதே சமயத்தில், "ஐயோ மகனே!..." என்ற இந்தத் திடீர்க் குரலைக் கேட்டு, பகாசூரன், ராஜா எல்லோரும் 'சடார்' என்று திரும்பிப் பார்த்தார்கள்.

தன் எஜமானியம்மாள் குழந்தைக்காக அங்கு அல்வா வாங்கிப் போக வந்த ராஜாவின் அம்மா, தன் அருமை மகனின் கதியைக் கண்டு கதறியோடி வந்தாள்!

தன் அம்மாவைக் கண்டதும் ராஜாவுக்குத் தூக்கி வாரிப் போட்டது. அவன் "அம்மா!..." என்று அலறி, பகாசூரனின் இரும்புப் பிடியிலிருந்து விடுவித்துக் கொள்ளத் துடியாய்த் துடித் தான்.

அம்மா பாய்ந்தோடி வந்தாள். பகாசூரனிடமிருந்த ராஜாவை வாரியிழுத்து அணைத்துக் கொண்டாள்.

"பூதம் மாதிரி இருக்கிறே, குழந்தையை இப்படிப் பிய்க்கிறுயே ஏன், அவன் அப்படி என்ன தப்பு செஞ்சுட்டான்?"

"அடே, ரொம்ப ரோசக்கார அம்மாதான்! விடும்மா அவனை!"

என்று அவளின் இறுக்கிய அணைப்பில் கிடந்த ராஜாவை இழுத் தான் பகாசூரன்.

ராஜா "அம்மா!" என்று கத்தினுன்! அம்மாவுக்கு உயிர் பதைத்தது. அவள் பகாசூரனைப் பார்த்து "என்ன ஐயா, நீர் மாடா, மனிதனு? விடய்யா குழந்தையை!" என்று சீறினுள்.

"எங்க முதலாளியிடம் வந்து உன் திருட்டுக் குழந்தையை மீட்டுக்கிட்டுப்போ!" என்று கத்திக்கொண்டே, ராஜாவை இழுத்துக் கொண்டு நடக்க ஆரம்பித்தான்.

"அவன் எதைத் திருடிவிட்டான்! கேட்டாக்க உன் பாட்டுக்குப் பறக்கிறீயே!"

"எங்க கடையிலே மிட்டாயை வாங்கிட்டுத்துட்டுக்கொடுக்காம ஓடியாந்துட்டான், உன் அருமையுள்ள திருட்டு மகன்!"—பகாசூரனின் கேலி நிறைந்த பேச்சைக் கேட்டதும் ராஜாவின் தாய்க்கு அவமானம் பிடுங்கித்தின்றது. அவள் கோபம் பொங்க ராஜாவைப் பார்த்தாள். அவன் தலையைக் குனிந்து கண்ணீர் வடித்தான். அம்மாவுக்கு மனம் இளகியது. என்னதானிருந்தாலும் பத்து மாதம் சுமந்து பெற்றவளாயிற்றே!

அம்மா கண்களில் கண்ணீர் வழிய, நெஞ்சில் துக்கம் வழிய ராஜாவின் விடுதலைக்காக அந்தப் பகாசூரனிடம் எவ்வளவோ மன்றாடினாள். கெஞ்சிக் கதறினாள். அழுது வேண்டினாள்.

"ஊஹூம்! அதெல்லாம் எனக்கொண்ணும் தெரியாது! எல்லாம் எங்க முதலாளிகிட்டே கேட்டுக்குங்க. பிடிச்சுட்டு வரச் சொன்னார். பிடிச்சுட்டுப் போறேன். அவ்வளவுதான்!" என்று ஈவு இரக்கமின்றி சொல்லிச் கொண்டே ராஜாவை இழுத்துக் கொண்டு மிட்டாய்க் கடையை நோக்கி வேகமாய் நடந்தான் பகாசூரன். அம்மா அவன் பின்னாலேயே ஓட்டமும் நடையுமாய் ஓடினாள்.



கடை வாசலில் ராஜாவுக்காக பிரம்பும் கையுமாய்நின்று கொண்டிருந்த கடைக்காரன் ரூபீ சென்று பாய்ந்து பகாசூரனின் பிடியிலிருந்த ராஜாவின் தலையைப் பிடித்து உலுக்கி 'பளீர்!' என்று ஒரு அடி வைத்தான்.

"அம்மா!" என்று கத்தித் துடித்தான் ராஜா!

"ஐயோ!" என்று கூவிப் பதைத்தாள் பெற்றவள். பதைத்துப் பாய்ந்தோடிச் சென்று கடைக்காரன் பிரம்புக் கையைப் பிடிதுக் கொண்டு அவன் முகத்தைக் கருணையுடன் பார்த்துக் கண்ணீர் வடித்தாள்.

"ஐயா, தயவு செய்து என் பிள்ளை செய்த குற்றத்தை மன்னித்துக்கொள்ளுங்கள் ஐயா. உங்களுக்குக் கோடிப்புண்ணியம் உண்டு!" என்று கடைக்காரனைக் கெஞ்சப் போன அவள், கடைக்காரனின் முகத்தையே உற்றுப் பார்த்தபடி வாய் புதைத்து நின்றாள்! கடைக்காரனும், அவளின் முகத்தை ஊடுருவிக் கூர்ந்து பார்த்தான். கடைக்காரனும், தன் அம்மாவும் ஒருவரை ஒருவர் பார்த்து விழிப் பதைக் கண்ட ராஜாவும் ஒன்றும் புரியாமல் பரக்கப் பரக்க விழித்தான். மூவரும் விழிப்பதைக்கண்ட பகாசூரனும் 'பெப்பே...பே...' என்று விழித்தான்!

அப்புறம்.........?

ரங்கோனிலிருந்து உயிர் தப்பிச் சென்னைக்கு வந்து மிட்டாய்க் கடை வைத்துக் காலத்தைக் கண்ணீரும் கம்பலையுமாய்க் கழித்து வந்த தன் அருமை அப்பாவுடனும், தன்னை எட்டு ஆண்டுகளாகக் கண்ணும் கருத்துமாக வளர்த்து வந்த உயிரான அம்மாவுடனும் நிரம்பவும் குதூகலத்துடன் பழையபடி ராஜா போலச் சுகமாக வாழ ஆரம்பித்தான் ரங்கோன் ராஜா!


## மல்லிகை வெளியீட்டகம்
## (M. P. H.)

| | | |
|---|---|---|
| எகிப்து நாட்டு எழிலரசி | (நிலாவழகன்) | 1—0—0 |
| ஏமாறாதே | ,, | 0—6—0 |
| இரத்த வெள்ளம் | ,, | 0–10—0 |
| விஞ்ஞானத்தில் அண்ணா | | 0—8—0 |
| அண்ணா காண்கிறார்–கேட்கிறார் | | 0—8—0 |
| நாட்குறிப்பு | | 0—3—0 |
| சுந்தரம்பிள்ளையும் அண்ணாவும் உள்ள மூவர்ணக் காலண்டர் | | 0—6—0 |
| WASTE | | 0—3—0 |
| ஏ, சதிகாரச் சமுதாயமே! | | 0—3—0 |
| திருக்குறள் ஏன் தேவை? | | 0—3—0 |
| உலகைத் திருத்திய உத்தமர்கள் | (ஊடுருவி) | 1—0—0 |
| ரஸ்புடீன் | ,, | 0—8—0 |

வியாபாரிகட்கு 25% கழிவு. செலவு இனம்.

கிடைக்குமிடம்:

**அன்னை வெளியீட்டகம்,**

78, விசய விக்னேசுவரர் கோவில் தெரு,

சூளை, சென்னை–7

# வஞ்சம் தீர்ந்தது

மு. அண்ணாமலை

பல வழிகளிலும் வியப்பானதொரு நிகழ்ச்சி ஒரு சமயம் நடந்தது. அது இன்னும் என் நினைவில் இருக்கிறது.

நான் அப்பொழுது அரசியல் பொது வழக்கறிஞனாக வேலை பார்த்து வந்தேன். அந்த வேலை சம்பந்தப்பட்டவரை எனக்கு அறமன்றத்தில் நல்ல பெயரும் புகழும் இருந்தன. மாய்ரன் என்னும் பள்ளி ஆசிரியரின் விவகாரம் என் வசத்தில் ஒப்புவிக்கப்பட்டிருந்தது. அது ஊரில் கொஞ்சம் பிரபலமாக அடிபட்டுக்கொண்டிருந்த வழக்காகும்.

மாய்ரன் வடபிரான்ஸில் நல்ல பெயரோடு ஆசிரியராக இருந்து பணியாற்றி வந்தார். அவர் கெட்டிக்காரர்; எதையும் சிந்திக்கக் கூடியவர்; சமய நம்பிக்கை உள்ளவர்; மிகவும் அமைதியானவர். தான் வேலை பழகிய பாய்சோவிநாத் என்ற மாவட்டத்திலேயே ஒரு பெண்ணைத் தேடி மணந்துகொண்டார். அவருக்கு மூன்று பிள்ளைகள் உண்டு. ஆனால் அம் மூன்று குழந்தைகளும் ஒன்றன் பின் ஒன்றாகச் சில நாளில் இறந்துபோயின. குழந்தைகளைப் பறிகொடுத்த பெரிய இழப்பின் பின்னர் அவரிடம் படித்த அனாதைக் குழந்தைகளிடம் மிக அன்பும் பற்றுதலும் காட்டினார். கெட்டிக்காரக் குழந்தைகளுக்குத் தன் சொந்தக் கைக் காசிலிருந்து விளையாட்டுப் பொருள்களும் தின்பண்டங்களும் வாங்கிக் கொடுத்தார். ஒவ்வொருவரும் அந்த நல்ல மனிதரின் அருள் உள்ளத்தையும் நற்பண்பையும் போற்றிப் புகழ்ந்தனர். திடீரென்று அவரிடம் படித்த ஐந்து குழந்தைகள் இறந்த போதும் அவர்கள் அவரைப்பற்றி அவ்வாறே கூறினர். அழுக்கேறிய தண்ணீரினால் ஏற்பட்ட தொத்து நோயே அந்தக் குழந்தைகளின் சாவுக்குக் காரணமாக இருக்கும் என்று பலர் நினைத்தனர். அந்தச் சாவைச் சரியாக ஆராய்ந்து தெரிந்துகொள்ளாமல் காரணம் கற்பித்துக்கொண்டனர். சாவின் குறிகளோ மிக வியப்பானவையாகத் தோன்றின. குழந்தைகள் ஒன்றும் உண்ண முடியாமல் வயிற்று வலியால் அலறித் துடித்துக் கடைசியில் பயங்கரமான ஊளையுடன் இறந்துபோயின.

குழந்தைகளின் சில உறுப்புக்கள் பாரிஸுக்குப் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டன. சவப் பரிசோதனையிலும் அவை எவ்வாறு இறந்திருக்கலாம் என்பதற்குரிய காரணங்கள் புலப்படவில்லை.

பின்னர் ஓராண்டு சென்றது. அத்தகையதொரு சாவு தொடர்ந்து நிகழவில்லை. ஓராண்டுக்குப்பின் மீண்டும் மாய்ரன் வகுப்பில் இரண்டு கெட்டிக்காரக் குழந்தைகள் நான்கு நாட்கள் துடித்து அலறி இறந்தன. சவப்பரிசோதனை நடந்தது. குழந்தைகளின் வயிற்றில் கண்ணாடித்தூள்கள் காணப்பட்டன. அந்த இரு குழந்தைகளும் தவறி ஏதோ கண்ணாடித் தூள்பட்ட தின்பண்டங்களைச் சாப்பிட்டு இறந்திருக்கக்கூடும் என்று எண்ணினர்.

பாலில் கலக்கும் சிறு கண்ணாடித்தூள்களே அக்கோர நிகழ்ச்சிக்குப் போதுமான காரணமாக அமையலாம். ஆசிரியர் மாய்ரனின் வேலைக்காரி அப்பொழுது திடீரென நோய் வாய்ப்பட்டாள். மருத்துவர்கள் குழந்தைகளிடம் கண்ட நோயின் குணங்களையே அவளிடமும் கண்டனர். அவளை நன்ருக விசாரித்ததில், குழந்தைகளுக்காக ஆசிரியர் வைத்திருந்த தின்பண்டத்தைத் தான் திருடித் தின்றதாகக் கூறினுள்.

அறமன்றத்தின் ஆணையின் பேரில் பள்ளிக்கூடம் சோதனையிடப்பட்டது. அங்கே விளையாட்டுச் சாமான்களும் தின்பண்டங்களும் கைப்பற்றப் பட்டன. அத் தின்பண்டங்களில் பொடிப் பொடியான கண்ணாடித்தூள்கள் கலக்கப் பட்டிருத்தலைக் கண்டனர்.

மாய்ரன் உடனே கைது செய்யப்பட்டார். பின்னர் ஐயத்தின் பேரில் விடப்பட்டார். குற்றச்சாட்டிற்குரிய காரணங்கள் ஒருபுறம் நிற்க, ஆசிரியர் மாய்ரனுக்கு ஊரில் இருந்த நல்ல பெயரும், அது காரணமாக எனக்கேற்பட்ட முதல் அபிப்பிராயமும் ஒருபுறம் எழுந்து போராடின. ஆசிரியர் குழந்தைகளை ஏன் கொல்லவேண்டும்? குழந்தைகளைக் கொல்ல எந்த விதமான குறிக்கோள் இருக்க முடியும் என்ற நினைப்புவேறு.

ஊருக்கு நல்லவர், சமய நம்பிக்கையும் அமைதியான வாழ்க்கையும் உடையவர். ஏன் அவசியமில்லாமல் குழந்தைகளைக் கொல்லப்போகிருர்? அதோடுங்கூட அவர் அந்தக் குழந்தைகளை மிக விரும்பி ஆதரித்தவராயிற்றே! தான் ஈட்டியதில் பாதிப் பணத்தை அந்தக் குழந்தைகளுக்குச் செலவழித்தவராயிற்றே!

அதை ஒத்துக் கொள்ள வேண்டுமாயின் ஒருவன் அதைப் பற்றி முடிவுக்கு வரும்போது மாய்ரன் ஒரு பைத்தியமாயிருக்க வேண்டும் என்று கூறக்கூடும். அப்படி மாய்ரனிடம் கிறுக்குத்தனம் ஏதும் இருப்பதாகக் காட்டுதற்கும் வழியில்லை. அமைதியானவர்; எதையும் தீர

முடிவுசெய்து செயலாற்றுபவர்; தெளிந்த அறிவாளியுங்கூட.

அவர் தின்பண்டங்கள் வாங்கும் கடை சம்பந்தப்பட்டவரையும் ஒன்றும் ஐயப்படுவதற்கு வழியில்லை.

யாரோ ஒரு பகைவன் அந்தக் கண்ணாடித்தூள்களையும் குண்டூசித்தூள்களையும் கள்ளத்தனமாக வைத்து அக்குற்றத்திற்கு உள்ளாக்க நினைத்திருக்க வேண்டும் என்று ஆசிரியர் கூறினார். ஆசிரியரது குற்றத்தை மேலும் வலியுறுத்தக்கூடிய இரண்டு சான்றுகள் கிடைத்திராவிட்டால் ஆசிரியர் ஒரு வேளை விடுதலை செய்யப்பட்டிருக்கலாம். அவருடைய சொந்தப் பொடி டப்பா நிறையக் கண்ணாடித்தூள்கள் இருந்தன. அந்தப் பொடிடப்பாவும் அவர் எப்பொழுது எதில் உட்கார்ந்து எழுதுவாரோ, எதில் பணம் முதலியவை ரகசியமாக வைத்திருப்பாரோ அதிலேயே இருந்தது. அதைக்கூடத் தெரியாத பகைவனின் கடைசி வேலையாகவே இருக்கும் என்று சாதித்து விடலாம். ஆனால் மற்றொன்றை ஆசிரியர் மறுத்துரைப்பதற்கில்லை. அவருக்குப் பலமுறை ஊசிகள் விற்ற கடைக்காரன் அறமன்றத் தலைவரிடம் நேரே வந்து மாய்ரன் தன்னிடம் பலமுறை ஊசிகள் வாங்கியிருப்பதையும் தன்



னெதிரிலேயே அந்த ஊசிகள் ஏற்றனவா இல்லையா என்பதை ஓடித்துப் பார்த்து வாங்கியிருக்கிறார் என்பதையும் தெளிவுபடக் கூறினான். அத்துடன் பன்னிரண்டு பேர்களுக்குமேல் ஆட்களைக்கொண்டு வந்து அவர் ஊசி வாங்கியமைக்குச் சாட்சியாக நிறுத்தினான். அந்தப் பன்னிருவரும் ஆசிரியரை முதல் தடவையிலேயே, பார்த்த உடனேயே புரிந்து கொண்டனர். அவர்களை விசாரித்ததில் வியாபாரி குறிப்பிட்ட நாட்களிலெல்லாம் ஆசிரியர் கடையில் ஊசி வாங்கியது உண்மைதான் என்று தெரிந்தது.

ஆசிரியர் மாய்ரன் குழந்தைகளுக்கு அவைகள் விரும்பியபடி தின்பண்டங்களைக் கொடுக்காமல் தாமே பார்த்தெடுத்து அவற்றிடம் கொடுத்ததையும், அக்குழந்தைகள் தின்பண்டங்களை வாங்கிக்கொண்டு ஓடிவிடாமல் தன்னெதிரிலேயே சாப்பிட்டுவிட்டுப் போகும்படி செய்ததையும் நான் நினைத்தபோது அக்குற்றச்சாட்டுக்குப் போதுமான ஆதாரம் அதற்குமேல் வேண்டியதில்லை என்று தோன்றிற்று. பொதுமக்களின் குரல் ஆசிரியரை விடாது சரியாகத் தண்டித்துக் கழுவேற்றும்படி கூறிற்று.

மாய்ரன் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டார். அவருடைய மேல்மனுக்கள் தள்ளப்பட்டன. மன்னிப்புப் பெறுவதற்கு முடியாது போயிற்று. என்னுடைய தந்தையார் "அரசர் இந்தச் செயலை மன்னிக்கமாட்டார்" என்று என்னிடம் கூறிவிட்டார்.

★

ஒருநாள் காலையில் நான் அலுவலகத்தில் உட்கார்ந்து அலுவலில் ஈடுபட்டிருந்தேன். அப்பொழுது சிறைப்பாதிரி என்னைப்பார்க்க வந்தார். அவர் பொதுவாக மனிதர்களைப்பற்றியும் சிறப்பாகக் குற்றவாளிகளின் வாழ்க்கையைப்பற்றியும் நன்கு அறிந்திருந்தார். அவர் கொஞ்சம் தளர்ந்து வருத்தத்தோடு காணப்பட்டார். என்னோடு பல வேறு விஷயங்களைச் சிறிதுநேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு எழும்போது, "ஆசிரியர் மாய்ரனைத் தூக்குப் போட்டு விடுவீர்களாயின் குற்றமற்ற அப்பாவி மனிதன் ஒருவனைக்கொன்ற பாவத்திற்குரியவர்களாவீர்கள்" என்று சொல்லிவிட்டுச் சென்றார். அவர் சொன்ன சொற்களின் பொருளில் நான் ஈடுபட்டிருந்தபோது என் மறுமொழிக்கு எதிர்பாராமலேயே வெளியே சென்றுவிட்டார். அவர் அந்தச் சொற்களைக் கூறும்போது அமைதியாகவும் மெதுவாகவும் ஒரு உயிரைக்காக்க வேண்டிய பொறுப்புணர்ச்சி புலப்படும்படியாகவும் கூறினார்.

ஒருமணிநேரம் சென்ற பின் நான் பாரிஸ் நகரத்துக்குப் புறப்பட இருந்த சமயத்தில் என் தந்தையைச் சந்தித்து அரசரை நேரில் காணுவதற்குரிய ஏற்பாட்

டைச் செய்து தருமாறு வேண்டிக் கொண்டேன்.

நான் தந்தையோடு அரசரைப் பார்க்கச் சென்றேன். மூன்றும் நெப்போலியனுக்கு நாங்கள் அறிமுகம் செய்விக்கப்பட்டோம். அரசர் ஏதோ வேலை பார்த்துக் கொண்டிருந்தார். நான் மாயனின் வழக்கு முழுவதையும் தெளிவாக விளக்கிச் சொன்னேன். சிறைப்பாதிரி கூறியவற்றையும் விடாது கூறினேன். நான் கூறிக் கொண்டிருந்த போது அறைக் கதவு திறந்தது. அரசி உள்ளே நுழைந்தாள். அரசன் தனியாக இருப்பதாக எண்ணிக்கொண்டு அரசி வந்திருக்கவேண்டும். அரசர் அரசியிடம் இது பற்றிக் கலந்தார். இந்த வழக்கைக் கேட்ட உடனே அரசி, "அந்த மனிதன் மன்னிக்கப்படவேண்டும்; ஐயோ பாவம், ஒரு அப்பாவி மனிதன்" என்றாள்.

எனக்கென்னவோ பயங்கரமான சந்தேகம் இருந்து கொண்டுதான் இருந்தது. அரசியின் மனமாற்றத்தைக் கண்டு ஆச்சரியப்பட்டேன்.

நான் அரசரிடம் கொஞ்சம் தயங்கினேன். அரசரும் ஒருமுடிவிற்கும் வராமலேயே இருந்தார். நல்ல குணம் ஒருபக்கமும், ஒரு குற்றவாளியை விடுவித்து அதனால் வரும் முட்டாள் பட்டம் ஒருபக்கமும் அரசரை எந்தத் தீர்மானத்திற்கும் வரமுடியாதபடி தடுத்தது. அரசி அதைப் பார்த்து "என்னயோசனை; குற்றவாளி தண்டிக்கப்படாமல் விடப்பட்டாலும்பரவாயில்லை; ஒரு அப்பாவி கொலை செய்யப் படவேண்டாம்" என்று அடித்துப் பேசினாள். மேலே அங்கே பேசுவதற்கு இடமில்லாது போய் விட்டது. அரசியின் பேச்சே முடிவாயிற்று. தூக்குத் தண்டனை என்பது மாற்றப்பட்டு அதற்குப் பதிலாக வேறு தண்டனை கொடுக்கப்பட்டது.

★

சில ஆண்டுகள் சென்றன; கோடைக்கால விடுமுறையை என் உறவினரொருவரின் இல்லத்தில் கழிப்பதற்குச் சென்றிருந்த சமயம் அது. நாங்கள் உணவருந்த அமர்ந்த போது ஒரு இளம்பாதிரி என்னைப் பார்க்க விரும்புவதாகச் சொல்லி அனுப்பினார். உள்ளே வரும்படி கூறினேன். யாரோ—இறந்து கொண்டிருக்கும் மனிதன் என்னை பார்க்க வேண்டும் என்று விழைவதாகக் கூறினார். இது மாதிரிப் பார்வையிடுவது என் தொழிலுக்கு இயல்பான வழக்கம்தான்.

நான் அந்தப் பாதிரியைத் தொடர்ந்து அவலமான இருப்பிடம் ஒன்றிற்குச் சென்றேன். பரப்பிய வைக்கோலின் மேல் உட்கார்ந்து சுவரில் சாய்ந்தபடி மூச்சுவிடத் திணறிக் கொண்டிருந்தான் நோயாளி. அவன் எலும்புக்கூடாக இருந்தான். அவனது உயிர் விரைவில் போய்விடும் என்பது தெரிந்தது. என்னைப் பார்த்ததும் "என்னைத்

தெரிந்து கொள்ள முடியவில்லையா?'' என்று கேட்டான்.

"தெரியவில்லையே''

"நான்தான் மாய்சன்''

நான் கொஞ்சநேரம் நடுங்கிப் போனேன்; "யார் அந்தப்பள்ளி ஆசிரியனா?'' என்றேன்.

"ஆம்''

"எப்படி இங்கே வந்தாய்?''

"அவற்றை யெல்லாம் நான் விவரிப்பதென்றால் நேரம் போதாது; நான் இறந்து கொண்டிருக்கிறேன். நீங்கள் இங்கிருப்பது தெரிந்து இந்தப் பாதிரியாரைத் தங்கள் முன்னிலைக்கு அனுப்பி அழைத்து வரும்படி கேட்டுக்கொண்டேன். என்னுடைய பாவங்களை உங்களிடம் தான் சொல்லித்தீர்த்துக் கொள்ளவேண்டும். என்னை நீங்கள் காப்பாற்றிய அன்றிலிருந்து உங்கள் முன்னிலையில் தான் நான் வெளியிடவேண்டும் என்று நினைக்கிறேன். இதற்காகப் பாதிரியைக் கூட்டிக் கொண்டு வந்திருக்கிறார்கள். பாதிரியிடம் சொல்வதற்கு மனமில்லை. உங்களிடம் என் வாழ்க்கையில் நடந்தவற்றை ஒளிவு மறைவின்றிச் சொல்லிவிடுகிறேன். நான் உலகை விட்டுப் போகுமுன் யாரிடமாவது சொல்லிவிட்டுச் சென்றால் தான் என் மனம் அமைதி பெறும்.

"நானே ...... அந்தக்குழந்தைகளைக் கொன்றேன்—ஆம்; நானே தான். என் வஞ்சம் தீர்வதற்காகவே அப்படிச் செய்தேன்.

"கொஞ்சம் கவனியுங்கள். நான் நல்லவனாகவே வாழ்ந்தேன். மிகத்தூயவனாகவேவாழ்ந்தேன். கடவுளை வணங்கினேன். எந்தக் கடவுள் அன்பு செய்யத் தூண்டுகிறாரோ அந்தக் கடவுளை நான் வழிபட்டேன். பொய்க் கடவுளை நான் வணங்கவில்லை. கொலைகாரக் கடவுளை, திருட்டுக் கடவுளை நான் வணங்கவில்லை. நான் எந்தத்தவற்றையும் செய்ததில்லை. எந்தப் பாபச்செயலையும் புரிந்ததில்லை. நான் அரும் பெருந்தூய்மையோடு வாழ்ந்தேன்.

"மணமானதும் எனக்குச் சில குழந்தைகள் பிறந்தன. மற்ற எந்தத் தந்தையும் நேசியாத அளவு அவற்றிடம் அன்பு காட்டினேன். அந்தக் குழந்தைகளுக்காகவே வாழ்ந்தேன். அவை மூன்றும் இறந்தன. ஏன் ...ஏன், ஏன் அவைகள் இறக்க வேண்டும்? நான் என்ன தவறு செய்தேன்? என் மனம் முழுக்க முழுக்க மாறிவிட்டது. என் மனம் வெறிச்சென்று மாறி நல்லெண்ணங்கள் அனைத்தையும் இழந்து விட்டது. நான் தூக்கத்திலிருந்து கண் விழிப்பது போல் விழித்தேன். கடவுளைப் பெரும் வஞ்சகனாகக் கண்டேன். ஏன் என் குழந்தைகளின் உயிரை இறைவன கவர்ந்தான்? ஏன் கவரவேண்டும்? நான் கண் விழித்துப் பார்த்தபோது கடவுளைக் கொலைவெறி பிடித்தவனைப்போலக் கண்டேன். உயிரைப் பின்னால் பறித்துக் கொண்டு போவதற்குத்தான் முன்னால் கொடுக்கிறான். கடவுள் ஒரு கொலைகாரன். அவனுக்கு

ஏதாவது சில சாவுகள் ஒவ்வொரு நாளும் இருந்து கொண்டே இருக்கவேண்டும். சாவுக்காக எத்தனை வழிகளை அமைத்திருக்கிறான். அத்தனையும் அவன் கண்டு ரசித்துக் கும்மாளம் அடிக்கத்தான்! எத்தனை வகையான நோய்களை உண்டாக்கியிருக்கிறான்! எத்தனை வகையான விபத்துக்கள்! எல்லாம் அவன் திருக்கூத்துக்கும் மகிழ்ச்சிக்கும் தான். அம்மை, காலரா, பிளேக் இன்னும் எத்தனை எத்தனை அந்தப் பூதம் கண்டு பிடித்திருக்கிறதோ!

"அவை மட்டும் போதாதென்று அவ்வப்போது உலகில் சண்டைகளை உண்டாக்குகிறான். நூறாயிரக்கணக்கான படைவீரர்கள் காலொடிந்தும், கையொடிந்தும், தலை சிதறியும், ஊனமடைந்து உயிர்விட வைக்கிறான்.

"அவைமட்டுமல்ல; ஒரு மனிதன் மற்றொரு மனிதனை உண்ணும்படிகூட அவன் செய்திருந்தான். மனிதன் சிறிது நாகரிகம் அடைந்ததும் கடவுள் மிருகங்களைப் படைத்து அவற்றோடு மனிதன் போராடுவதையும் வீழ்த்தி உண்பதையும் பார்த்திருக்கிறான். ஒரு மணியில் ஆயிரக்கணக்கில் பெருகி ஒரு நாளே வாழ்ந்து கழிகிற சிற்றுயிர்களையும் படைத்தான். ஒரு மிருகம் மற்றொரு மிருகத்தைக் கொல்லுவதைப் பார்த்துக் களிக்கிறான். அந்த நல்ல கடவுள் இத்தனையும் தான் பார்த்து மகிழ்வதற்காகவே செய்திருக்கிறான். எல்லாவற்றையும் ஒவ்வொரு பெரும் பொருளையும் ஒவ்வொரு சிற்றணுவையும் அவன் பார்க்கிறானல்லவா! எல்லாவற்றையும் தான் மகிழ்வதற்காகவே பார்க்கிறான்; அட மிருகமே!

"ஆகையால்தான் அந்தக் குழந்தையைக் கொன்றேன். நான் அந்த விளையாட்டை ஆண்டவன் போரால் செய்தேன். அவன் மட்டுமல்ல அவற்றைச் செய்பவன். நானும் செய்வேன். நான் இன்னும் பல குழந்தைகளைக் கொன்றிருக்கக்கூடும். ஆனால் அந்த வழியிலிருந்து நான் தங்களால் மீட்கப்பட்டுவிட்டேன்.

"அவ்வளவுதான்........நான் இறக்கப்போகிறேன்." என்று மாய்ரன் நிறுத்தினான். எப்படிச் சிரித்தான்...நச்சுக் கொடுக்கு!

மூச்சு விட முடியாமல் திணறிக்கொண்டிருக்கும் அந்தச் சோகமயமான பிராணியைப் பார்ப்பதற்கு எனக்குச் சங்கடமாக இருந்தது. தன் பெரிய வாயைத் திறந்து மெதுவாகவே பேசினான். வைக்கோல் படுக்கையின்மேல் இருந்த துணியை இழுத்துச் சரிசெய்து கொண்டான். கால்கள் மெதுவாக அசைந்தன.

"பயங்கரமான பிராணி! பயங்கரமான பழம் நினைவுகள்!!"

"ஏதாவது இன்னும் நீ சொல்ல வேண்டியிருக்கிறதா?" என்று அவனைப் பார்த்துக் கேட்டேன்.

"இல்லை" என்றான்.

"சரி, நான் போய் வருகிறேன்"

நான் கதவைத் திறந்து கொண்டு ஓட்டமாய் ஓடி வெளியேறினேன். (மூலம்: மாபஸான்)

1st Prize winners of C. No. 64. 1) K. N. G. Nathan Nair, Tiruvella, 2) A. V. Ramiah Narsapur, 3) M. Vaidya, Shahjahanpur, 4) B. Abraham, Warrangal, 5) P. P. Chetty, Cuddapah, 6) B. N. Rajappa, Mysore, 7) S. P. Singh, Jullundur, 8) M. G. Nabi, Srinagar, 9) M. Kothari, Calcutta, 10) L. N. Budhi, Behar and 19 others. IN addition 1 person is awarded 2nd prize, 17 the 3rd and 12 the 5th prize.

**Full particulars are published in the Rainbow dated *25-12-51***

ரிஜிஸ்டர் நெ. 277 — போட்டி நெ. 1

# ரூ. 25,000 பரிசு

M S Premier Bank of India Ltd-ல் சீல் செய்துவைக்கப் பட்டுள்ள சரியான விடை அவர்கள் அங்கீகாரத்தின்பேரில் பிரசுரிக்கப்படும். முற்றிலும் சரியான விடை அனுப்புபவர் களுக்கு முதல் பரிசு ரூ. 2 ,000. முதல் இரண்டு வரிசை சரியான விடைக்கு இரண்டாம் பரிசு ரூ. 7000. முதல் ஒரு வரிசை சரியான விடைக்கு மூன்ரும் பரிசு ரூ. 3000. முதல் மூன்று நம்பர் சரியான விடைக்கு நான்காம் பரிசு ரூ. 2000 முதல் இரண்டு நம்பர்கள் சரியான விடைக்கு *5*-ம் பரிசு ரூ. 000 அளிக்கப்படும். எங்கள் ஸீல் வைத்த விடைகள்படி எல்லாம் சரியாக இருக்க வேண்டும்.

RAINBOW COMPETITIONS

KEY S. NO. 64 *103 to 118 = 442

| | | | |
|---|---|---|---|
| 116 | 109 | 113 | 104 |
| 103 | 114 | 110 | 115 |
| 106 | 111 | 107 | 118 |
| 117 | 108 | 112 | 105 |

We hereby certify that the above is the solution in original deposited with us by *Rainbow Competitions* No 64 on 19-11-51 in a sealed cover which was opened in our presence to day and that a copy of the above solution has been lodged with the Bank.

*For The Premier Bank of India Ltd.*

14-12-51

Agent Madras

**முடிவு தேதி 12–1–52 விடை 28–1–52**

பிரவேசக் கட்டணம் : கூபன் *1*-க்கு ரூ. *1-0-0* 6 கூபன் கொண்ட ஸெட் *1*-க்கு ரூ. 5-0-0

**34**

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

விடைகள் கண்டுபிடிக்கும் விதம்:— 1 முதல் 16 வரையுள்ள எண் களைக் கொடுக்கப்பட்டிருக்கும் கட்டங்களில், மேலிருந்து கீழும், இட மிருந்து வலமும், குறுக்காகவும் எப்படிக் கூட்டினலும் *34* வரும்படி யாக அமைக்க வேண்டும். ஒரு எண்ணை ஒரே தடவைதான் உபயோ கிக்க வேண்டும்.

விதிகள்:— தனி வெள்ளைக் காகிதத்தில் தேவையான கட்டத்துடன் எத்தனை கூப்பன்கள் வேண்டுமானலும் எழுதி அனுப்பலாம். ஒவ்வொரு கூப்பனிலும் பெயர், விலாசம், எண்கள் எல்லாம் ஆங்கிலத்தில் விளக்கமாக எழுதப்பட வேண்டும். பிரவேசக் கட்டணத்தைக் கிராஸ் செய்த போஸ்டல் ஆர்டர் மூலமாகவோ அல்லது மணியார்டர் மூலமாகவோ அனுப்பலாம். மணியார்டர் செய்த ரசீதைக் கூபன்களு டன் சோதது அனுப்ப வேண்டும். வசூலுக்குத் தகுந்தபடி, பரிசு பகிர்ந்து அளிக்கப்படும். போட்டி சம்பந்தமாக மானேஜர் தீர்ப்பே முடிவானது; சட்டபூர்வமாய்க் கட்டுப்படுவது மாகும். போட்டி முடிவு **RAINBOW** மாதமிருமுறைப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும், அல்லது 4 அணு ஸ்டாம்பு அனுப்பினல் விடை அனுப்பப்படும்.

கூபன்கள் அனுப்பவேண்டிய விலாசம் :—

# AMBAL PUZZLE NO. 1

**28 (14) Thandavaraya Gramani Street. Tondiarpet, MADRAS - 21**

அமோக ஆதரவுடன் விற்பனையாகிறது!

★ அலைமோதும் வாழ்வுக் கடலைக் கடக்க அணங்கொருத்தியை படகாக்க நினைத்தான் அவன்... ......

★ சமுதாயத்தின் சட்டதிட்டங்களுக்கு பக்க மேளம் கொட்டி அவல முடிவை அணைத்துக் கொண்டாள் அவள்...........

★ வாழ்வின் கடைசி நாள் வரை கட்டைப் பிரம்மச்சாரியாய் வாழ்வேவென்று கங்கணம் கட்டினான் அவன்...........

★ உடல் அழுகினும் உணர்ச்சியை அடக்கத்தெரியாது உத்தமனொருவன் வாழ்வுக்கு உலைவைக்கப் பார்த்தாள் ஒரு பச்சை வேசி.......... ..

★ சாகாவரம் பெற்று இன்பச் சதிராட ஏங்கி மடிகிருள் ஒரு மங்கை.

இவர்களை நீங்கள் சந்திக்க விரும்பினால்

# காதலி தேவை

சித்தார்த்தன் தரும் வாழ்க்கை சித்திரம்

கன்னல் நடை! கற்கண்டு கருத்துக்கள்!

மூவர்ண அழகான அட்டைப் படத்துடன்

விலை அணா 8

ஏஜண்டுகளுக்கு 25% கழிவு உண்டு

| | | | |
|---|---|---|---|
| அன்புத் தீ | 0—12—0 | முழுமதி | 0—8—0 |
| இதய ஓசை | 0—8—0 | காதல் பைத்தியங்கள் | 0—8—0 |
| காதலன் | 0—8—0 | ஜீவயாத்திரை | 0—8—0 |

விபரங்களுக்கு :

**வைகறை வெளியீடு**

திருப்பாதிரிப்புலியூர்



தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
197805
சென்னை-600 008



# மாதவிடாய் நின்றுபோனதா?

நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ்) REGD. BY CENTRAL DRUGS LABORATORY OF GOVT. OF INDIA, UNDER NO. CDL / 683

எக்காரணத்தினாலும் எத்தனை மாதமானாலும் நின்றுபோன மாதவிடாய் அதிசுலபமாகவும் அதிசீக்கிரமாகவும் தவறாமல் உடனே வெளியாகும். அநேக நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம் உத்திரவாதமுள்ளது. போலி மருந்துகளை வாங்கி ஏமாறாதீர்கள். விலை ரூ. 8-8-0 சாதாரண கேஸ்களுக்கு (Ordinary) ரூ. 10-8-0 மாதங்களான கேஸ்களுக்கு (Special) (தபால் செலவு தனி)

# கர்ப்பத்தடை

நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்)

Government Registered No. 266

12 நாட்கள் சாப்பிட்டால் 6 வருஷத்திற்குச் சாஸ்வதமாகக் கருவைத் தடுக்கும். மாதவிடாய் தவறாது. அநேக நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம். போலி மருந்துகளை வாங்கி ஏமாறாதீர்கள். (ஸ்பெக் ஜெல்லி) உபயோகித்தால் டெம்ப்ரவரியாக கருவைத் தடுக்கும். பில்ஸ் விலை ரூ. 12-0-0 ஜெல்லி விலை ரூ. 6-8-0 (தபால் செலவு தனி)

Mfgrs: **SEENU & CO., P. B. 1638, (6) Madras-1**

பிராஞ்சு : *134, SERANGOON ROAD* சிங்கப்பூர்

சிலோன் ஏஜண்ட்:

*NEW COLOMBO MEDICAL STORES, 82, Main st.,* கொழும்பு-1



*Edited, Printed and Published by Murugu Subramanian for Ponni Ltd., at Ponni Achakam, 16, Seni Amman Koil Street, Tondiarpet, Madras-21*

அச்சுத் தொழில் வளருகிறது. எல்லாவற்றையும் அச்சிலேற்றிக் காண மனிதன் எண்ணும் நாள் இது. எனவே அச்சகங்களிலே வேலைகளை முடித்துக் கொடுப்பதிலே நெருக்கடி ஏற்படுகிறது. என்றாலும் வாடிக்கைக்காரர்களுக்கு குறித்த தவணையில் கலைப்பண்பு, புதுமை, உயர்வு திகழ அவற்றைத் திட்டமிட்டு முடிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்ள நாங்கள் காத்திருக்கிறோம்!


விவரங்கட்கு:

# பொன்னி அச்சகம்

16, சேணியம்மன் கோவில் தெரு

தண்டையார்ப்பேட்டை :: சென்னை - 21

Regd. No. M.4849 PONNI

# பொன்னி

## பொங்கல் மலர்-1952

### கருத்துக் களஞ்சியம்

'பொன்னி'யின் புதுப் பொங்கல் மலர், கருத்துக் களஞ்சியமாக, அழகுக் குவியலாக, அரிய கலைப் படைப்பாக முற்றும் ஆர்ட் தாளில் உருவாகி வருகிறது. பொங்கற் பெருநாளன்று தமிழக மெங்கும் கிடைக்கும் நற்பரிசு, பொன்னி பொங்கல் மலர் 1952!

பதிவுத் தபாலில் பெற விரும்புவோர் அணா எட்டு சேர்த்தனுப்பவேண்டும்

**விலை ரூ 3-12-0**